www.padippakam.com




# அரங்கேற்றம்

மேடை 2 > அறிமுகம் 4 திங்களிருமுறை > திருவள்ளுவர் ஆண்டு 2023 > மாசி 5 > 16-2-1993

## தமிழன் குருதி தண்ணீர் ஆனது! தமிழன் வீரத் தோள் சாய்ந்தது!

கடலூர் தி. கிள்ளிவளவன்



உலக வரைபடம் நாளும் பல மாறுதல்களுக்கு இடம் கொடுத்து வருகின்றது. உலகின் பலபாகங்களிலே மக்கள் தங்கள் தங்கள் தனித் தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆதிக்கவாதிகளின் கோரிக்கைகளை ஏற்க மறுக்கின்ற போதுதான், கசப்புணர்வும், வெறுப்பும், விரக்தியும் பாதிக்கப்பட்டவனை இப்படி செயற்படுத்துகின்றன. போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்கள் அனைவருமே போராட்டம் வெற்றி பெறுகின்றவரை களத்திலே நிற்பார்கள் என்று கூறுவதற்கில்லை. இயல்பாகவே ஏதோ ஓர் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் ஒற்றுமை குலைந்தவர்களாக, அவர்கள் சார்ந்த கூட்டத்தை பிறருக்குக் காட்டிக் கொடுப்பவர்களை உள்ளடக்கியவர்களாகத்தான் இருப்பார்கள். அப்படியில்லையென்றால் ஆதிக்கவாதிகள் எப்போதும் வெற்றி பெறுவதே இயலாது. இது எல்லா காலத்திலும் அடிமைப்பட்ட மக்களிடையே நிலவி வரும் குணநலன்களாகும். இந்தக் குணநலன்களில் ஒன்றுக்கும் குறைவில்லாமல் இருப்பவன் தமிழன்.

இன்று 'தமிழ்' என்கின்ற சொல்லும், 'தமிழன்' என்பதும் எங்கோ, எப்போதோ கேட்ட சொற்களாக தமிழனுக்குப் படுகின்றன. இன்றையத் தமிழனுடைய குறிக்கோளெல்லாம் அடுத்து வருகின்ற தேர்தல் எப்போது என்பதுதான். எந்தப் பதவி என்பது அவனுக்கு முக்கியமல்ல, ஏதாவது ஒரு பதவி அவனுக்கு இருந்தே ஆகவேண்டும். அப்படி ஒரு வெறி இன்றைய தமிழர்களை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கின்றது.

இத்தகையவர்களையே முன்மாதிரியாகக் கொள்கின்ற இளைஞர் கூட்டமும் நாளும் வளர்ந்து வருகின்றது. வெறும் பணம் பண்ணுவது ஒன்றே இவர்களுடைய குறிக்கோள்' தமிழர் நலம் என்பது, இத்தகையவர்களின் உதட்டிலிருந்து உதிர்கின்ற சொற்களேயன்றி உள்ளத்தினின்று வருகின்ற முழக்கங்கள் அல்ல.

இங்கே தமிழன் வாழ்வு பொருளற்றதாகிவிட்டது. தமிழன் தனக்கென ஒரு அடையாளம் வேண்டும் என்கின்ற மனநிலை கொண்டவனாக இருக்க விரும்பவில்லை.

இவனுடைய சகோதரர்கள் கருநாடக மாநிலத்திலே வெட்டப்பட்டார்கள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. தொழிற் கூடங்கள் சுட்டெரிக்கப்பட்டன. பல தலைமுறைகளாக கருநாடகத்திலே வாழ்ந்த தமிழர்கள் கால் நடையாகவே தப்பிவந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்தார்கள். இந்திய நாட்டிலேயே தமிழன் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டான். கருநாடக அமைச்சர்கள் 'தமிழ் நாட்டிற்குப் பொங்கல் கொண்டாட தமிழர்கள் சென்று விட்டார்கள் என்று அறிக்கை விட்டார்கள். இது சென்ற ஆண்டு.

இந்த ஆண்டில் (1993) பம்பாய் தமிழர்களை சிவ சேனாக்காரர்கள் விரட்டியடிக்கின்றார்கள். தமிழர்களை பம்பாயிலிருந்து அழைத்து வர தனி ரயில்களை அனுப்பி வைத்தது அரசு. இவையெல்லாம் எங்கே நடக்கின்றது? "நாம் இந்தியர், நம் நாடு இந்தியா" என ஏகக்குரல் கொடுக்கும் காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களான கருநாடகத்திலும், மகாராட்டிரத்திலும்தாம்.

தமிழன் மட்டும் எங்கு சென்றாலும் அவன் உழைப்பை பயன்படுத்திக்கொண்டு பிறகு அவனைக் கண்ணால் பார்ப்பதே தங்கள் தகுதிக்குப் பாதகம் என்கின்ற நினைப்போடும் மமதையோடும் விரட்டியடிக்கப்படுகின்றான்.

ஆனால் அப்படி விரட்டியடிக்கப்படுகின்ற தமிழனோ, தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டதற்கான காரணங்களையும் சூழ்நிலைகளையும் அறிந்து கொள்ளும் ஆற்றலை

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

படிப்பகம்

**ஆஸ்கார் பரிசுக்கு ஆசைப்படும் தயாரிப்பாளர்கள் சிலர் அண்மையில் நமது வேர்களையும் பண்பாட்டு அடையாளங்களையும் காணப் புறப்பட்டிருக்கிறார்கள். பாரதிராஜாவும் அவரைப் பின்பற்றி வந்தவர்களும் நல்ல திரையில் பயணப்பட்டு இருக்கிறார்கள். இந்த மண்ணின் வேர்களை அறிந்த இளையராஜா போன்றவர்கள் இத்துறைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால்..**



# திரைப்படத்தில் தமிழ் அடையாளங்கள்

இந்திரன்

தமிழனுக்கு என்று தனியானதொரு கலைப்பாரம்பரியம் இருக்கிறது. உயர்ந்த இலக்கியம், தனி அடையாளம் கொண்ட நாட்டுப்புறக்கலைகள், தனிமுத்திரை பதிக்கும் பழங்கால ஓவியங்கள், சிற்பங்கள், கோயில்களின் தனித்தன்மைமிக்க கட்டடக்கலை, நாட்டுப்புற இசை, தனித்தன்மை கொண்ட இசைக்கருவிகள், தெருக்கூத்து புலியாட்டம், புரவியாட்டம் போன்ற நிகழ்கலைகள், தோற்பாவைக்கூத்து என்று ஒரு கலைப்புதையலுக்கு நாம் சொந்தக்காரர்கள். இத்தகைய ஒரு பின்னணி கொண்ட மண்ணில் அண்மைக்கால கலையான திரைப்படம் கொடிகட்டிப் பறக்கிறது. மொத்த இந்தியாவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களில் கணிசமான அளவுக்கு தமிழ்த்திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மிகவும் லாபகரமான தொழிலாகவும் இது இருக்கிறது. இத்தகைய நிலையில் தமிழ்த்திரைப்படம் தமிழனின் திரைப்படமாக இருக்கிறதா ?

இல்லை என்பதுதான் பதில். ஏன் இல்லை ? இந்த மொத்த கலைப் பாரம்பரியத்தின் பின்னணியில் நமது அடையாளம் சொல்லும் திரைப்படங்கள் முழு கலை ஆளுமையுடன் ஏன் வெளிப்படவில்லை? இந்தக் கேள்விக்கு திரைப்படத்துறையிலிருப்பவர்களிடமிருந்து கிடைக்கிற பதில்கள் திருப்தியளிப்பவைகளாக இல்லை.

முதலாவதாக திரைப்படம் என்பது பெரும் முதலீடு கொள்ளும் ஒரு தொழில்துறை. இதன்நோக்கம் பொழுது போக்கு அம்சங்களை நிறைய கொடுத்து பணம் பண்ணுவதாகத்தான் இருக்க முடியுமே தவிர கலைகளையும், பண்பாட்டையும் வளர்ப்பதாக இருக்கமுடியாது என்பதுதான். அதிக பணம் சம்பாதிக்கின்ற இந்தித் திரைப்படங்களுடனும், ஆங்கில திரைப்படங்களுடனும் நமது தமிழ்த்திரைப்படங்கள் ஒப்பு நோக்கி பேசப்படுகின்றன.

ஆனால் உண்மையில் இந்தி திரைப்படங்களுடன் தமிழ்த் திரைப்படங்களை ஒப்புநோக்க முடியுமா என்றால் முடியாது. ஏனெனில் இந்தி திரைப்படங்களுக்கான சந்தைகளும், தமிழ்த் திரைப்படங்களுக்கான சந்தைகளும் வேறு வேறானவை.

இந்தி திரைப்படங்கள், மொத்த இந்தியாவையும் கணக்கில் எடுத்துத் தயாரிக்கப்படுகின்றன. இந்தி தேசிய மொழி என்று பேசப்படுவதினால் இந்தித் திரைப்படங்கள் தமக்கென தனியானதொரு பண்பாட்டு அடையாளம் அற்றவைகளாகத் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக தமிழ்திரைப்படம் ஒன்றில் ஒரு நடனக்காட்சி வரவேற்கப்பட்டிருந்தால் இந்தித் திரைப்படம் அதை உடனே சுவீகாரம் செய்து கொள்ளும். தில்லானா மோகனாம்பாள் எனும் படத்தில் பரதநாட்டியம் பாராட்டப்பெற்றது என்றால் 'மேராநாம் ஜோக்கர்' இந்தித் திரைப்படத்தின் பிற்பகுதியில் இதுபோன்ற ஒரு நடனக்காட்சி சேர்க்கப்பட்டுவிடுகிறது.

ஆனால் தமிழ்த்திரைப்படத்திற்கான சந்தை அகில இந்திய சந்தை அல்ல. அதன் பெரும்பான்மை ரசிகர்கள் தமிழகம், அல்லது தமிழர்கள் அதிகம் வாழும் இந்தியாவின் பெருநகரங்கள் அல்லது மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தமிழர் பகுதி திரையரங்குகள்தான். இங்கு இத்தனை ஆண்டுகளாக மக்களை மகிழ்வித்து வந்த பொழுதுபோக்குக் கலைகள் மேலும் காட்டப்படுமென்றால் ரசிக்கப்படாமல் போகப்போவது இல்லை. ஆனாலும் நமது கலைகளைப் பற்றி நமக்கே ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டு என்பதினால் நாமே அவற்றைப் பயன்படுத்தத் தயங்குகிறோம். வெளிநாட்டு ஆஸ்கார் பரிசுக்கு ஆசைப்படும் தயாரிப்பாளர்கள் சிலர் அண்மையில் நமது வேர்களையும், பண்பாட்டு அடையாளங்களையும் தேடிப் புறப்பட்டு இருக்கிறார்கள். இது நல்ல போக்குதான்.

மொரீஷியசில் 1971ல் மராத்தி திரைப்பட விழா நடந்தது. அடுத்த ஆண்டே அங்கு தெலுங்கு திரைப்படவிழா நடந்தது. பைலோரஷியாவில் 1977-ல் கன்னட திரைப்பட விழா நடந்தது. இதே போன்று தமிழ்த்திரைப்பட விழாக்கள் நடைபெற்றால் அவை தமிழ்மொழியில் பேசுபவை என்பதைத் தவிர தனித்தன்மை கொண்ட தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்குமா என்று ஒரு நிமிடம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இந்த வகையில் பாரதிராஜாவும், அவரைப் பின்பற்றி வந்தவர்களும் மிக நல்ல திரையில் பயணப்பட்டு இருக்கிறார்கள். இந்த மண்ணின் வேர்களை அறிந்த இளையராஜா போன்றவர்கள் இந்தத்துறைக்கு வந்து இருக்கிறார்கள். 'மண்வாசனை' போன்ற திரைப்படங்கள் கிராமத்து பண்பாட்டினை மிகநல்ல முறையில் வெளிக்கொண்டு வந்துள்ளன. ஆனாலும் இன்று மூன்றாம் உலக சினிமாவில் இவர்களது இடம் என்ன என்று சிந்தித்துப்பார்த்தால் இவர்கள் எந்த அளவுக்குப் பின்தங்கி இருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியும். பண்பாட்டு வேர்களை அறிந்த இந்த மண்ணின் மைந்தர்களும்கூட தாழ்வுமனப்பான்மையினால் மீண்டும் மேலைநாட்டு திரைப்படங்களின் போலிகளையே தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாம் உலக சினிமாவில் ஒன்றான 'ரோஷமான்' திரைப்படத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையின் வரவு ஒரு விவசாயியை, ஒரு தொழிலாளியை, ஒரு மாணவனை, ஒரு கடைக்காரரை எப்படியெல்லாம் பாதிக்கிறது என்பதை மிகநல்ல முறையில் சித்தரித்துக் காட்டுகின்றது.

இப்படி நான் சொல்வதினாலேயே மூன்றாம் உலகின் பிறநாடுகளில் எடுக்கப்படும் தலைமறைவுத் திரைப்படங்களை இவர்கள் எடுக்கவேண்டும் என்று நான் வாதிடுவதாக நினைக்கவேண்டியது இல்லை. நமது அண்டை மாநிலமான மலையாள திரைப்படங்களையும் கூட தமிழ்த் திரைப்படம் விடும் மூச்சுக்காற்று எந்த அளவுக்கு பாழாக்கி இருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 19 ஆம் பக்கம்)

www.padippakam.com



தமிழ் நாடும் தமிழ் மக்களும் மனிதத்தன்மையாகிய "சுயமரியாதையை இழந்து மிருகங்களிலும், பூச்சி புழுக்களிலும் கேவலமாய் வாழும் நிலைமை ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களில் பார்ப்பன மதமாகிய இந்து மதமும், அம்மத ஆதாரங்களாகிய வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் முதலிய ஆபாசப் புரட்டுக்களே முக்கிய காரண"மென்று வெகு நாளாகச் சொல்லி வருகிறோம். அநேக விதங்களில் அறிவைக் கொண்டும் அநுபவங்களைக் கொண்டும் யாவருக்கும் நன்றாய் விளங்கும்படி விவரமாய் எழுதியும் வந்திருக்கின்றோம். இவற்றை மறுத்து இதுவரை யாரும் எவ்வித சமாதானமும் சொல்லாமல் "மதம் போச்சு", "நாஸ்திகமாச்சு", "தெய்வம் போச்சு" என்று பொய் அழுகை அழுகிறார்களே யல்லால் சற்றாவது கவனித்துப் பார்த்து இதற்கு என்ன செய்ய வேண்டும், இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி ஒரு சிறிதாவது கவலை கொள்ளாமல் இருப்பதுடன், செய்ய முயற்சிப்பவர்களையும் காலை வாரிவிட சூழ்ச்சிகள் நடந்த வண்ணமாகவும் எதிர்ப் பிரசாரங்கள் நடந்த வண்ணமாகவும் இருந்து வருகிறது.

அன்றியும், முன்னைவிட பார்ப்பன பிரசாரமும் பலமாய் நடந்து வருகின்றது. என்னே! தமிழர்களின் மானங்கெட்ட தன்மை.


தமிழ் மக்களில் பலர் படித்தவர்கள் என்றும், பண்டிதர்கள் என்றும், வித்துவான்கள் என்றும், ஆராய்ச்சிக்காரர்கள் என்றும், சீர்திருத்தக்காரர்கள் என்றும் சொல்லிக் கொண்டு வெளியில் புறப்பட்டு புத்தகம் எழுதுவது மூலமும், புராண பிரசங்கமூலமும், ஆராய்ச்சிமூலமும், சீர்திருத்தப் பிரசாரமூலமும், பத்திரிக்கையின்மூலமும் தமிழ் பாஷையைப் பரப்புவதென்பதன்மூலமும் மற்றும் பலவழிகளில் பார்ப்பன மதப் பிரசாரங்களையே மேலும் மேலும் செய்கின்றார்களே யொழிய வேறு ஒரு காரியமும் செய்ய அறிவும், ஆற்றலும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இந்த உபத்திரவம் போதாமல் இப்பொழுது சினிமாக்களும், நாடகக்காரர்களும், பாட்டுக்காரர்களும், உபன்யாசக்காரர்களும் இப் பார்ப்பன பிரசாரத்தையே கைப்பற்றி தினமும் கோடிக்கணக்கான மக்களுக்குப் புராணப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அன்றியும், சமீப காலமாக நமது நாட்டில் உள்ள எல்லா பத்திரிகைகளும் அறிந்தோ, அறியாமலோ இதே வேலையையே செய்து வருகின்றன. எந்த வாரப்பத்திரிகையின் முகப்பைப் பார்த்தாலும் ஆரியப் புராணப்புளுகுகளைப்பற்றி வியாக்கியானம் பண்ணுவதும், அதற்கு விசேஷ அர்த்தமும் தத்துவார்த்தமும் சொல்லுவதும், எழுதி வைத்தவர்களைப் புகழ்வதுமாகவே இருக்கின்றன. எந்த தினசரிப் பத்திரிக்கையைப் பார்த்தாலும், பார்பன மதக் கொள்கைகளை பிரசாரம் செய்யத்தக்க வண்ணம் ஆரியக் கதைகளையே விளக்கி வருகின்றது.

ஆனால் ஒவ்வொரு பத்திரிகையும் தன்னை சீர்திருத்தப் பத்திரிக்கையென்று சொல்லிக் கொண்டேதான் இந்தக் காரியம் செய்கின்றது—என்பதைக் கவனிக்கும் போதுதான் நமது மனம் பதறுகின்றது.

இது தவிர, பள்ளிக்கூட டெக்ஸ்ட் பாடபுத்தகங்கள் என்று அநேக பார்ப்பனர்களும், சுயமரியாதையும் அறிவும் இல்லாத சில பார்ப்பனரல்லாதார்களும், ராமாயணம், பாரதம், பாகவதம், கந்தபுராணம், பெரிய புராணம், அருணாசலப் புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய குப்பை கூளங்களின் பேரால் சிறுசிறு கதைப் புத்தகமும் எழுதி சிறு குழந்தைகளுக்குப் பார்ப்பன விஷத்தை ஊட்டுவதும் சகிக்கக் கூடியதாயில்லை.

எந்தப் புத்தகத்தைப் பார்த்தாலும் ஆரியர் மேலோர் என்பதும் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதும், தென்னாட்டில் ஒரு முரட்டு ஜாதியார் காட்டுமிராண்டிகளாய் இருந்தார்கள் அவர்களைத்தான் வானரங்கள் என்று சொல்லப்படுவது என்றெழுதுவதும், ஆரியர் தென்னாட்டிற்கு வந்த பிறகே தமிழ் மக்கள் மனிதத் தன்மையை அடைந்தார்கள் என்றுஎழுதியதுமான புத்தகங்களைப் படிக்கச் செய்வதே இப்போது தேசியப் படிப்பாக மாறி வருவதும் நினைக்க நினைக்க வயிறெல்லாம் பற்றி எரிகின்றது.



# தமிழர்களே உங்களுக்குப் புத்தி இல்லையா?

இன்னும் பல வழிகளில் தமிழர்களை இழிவு படுத்தியிருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் இதில் எழுத மனம் வெட்கப் படுகின்றது! இதற்கு என்ன வழியென்று யார் சிந்திக்கிறார்கள். பார்ப்பனர்களுடைய முகக் கோணலை பொறுத்துக் கொள்ள தமிழ் மக்களில் ஆட்கள் இல்லையென்றால், அந்தச் சமூகம் வாழுவதால் பயன் என்ன என்று கேட்கின்றோம். பார்ப்பனரல்லாதார்களில் வயிற்றுக்கில்லாத கூலிகளின் செய்கைகளைப்பற்றி நாம் பிரமாதமாய் இதில் எழுத வரவில்லை.

வயிற்றுக்குத் தாராளமாய் கிடைக்கத்தக்க தொழிலையும் தனி சம்பாத்தியத்தையும், சொத்துக்களையும் நிலையையும் வைத்துக் கொண்டிருக்கும் ஆசாமிகள் பார்ப்பனப் பிரசாரங்கள் செய்யும் முட்டாள் தனத்திற்கு நாம் என்ன சமாதானம் செய்து கொள்ளக்கூடும். பார்ப்பனரல்லாத அரசர்களில் பெரும் பகுதியார் பார்ப்பனர்களுக்குப் பிள்ளையாய் பிறக்கக் கருதுகிறார்களேயொழிய பார்ப்பன மதக் கொடுமையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இழிவைப் பற்றி கருதுகிறார்களா என்று பார்த்தால் அதுவும் ஒரு சிறிதும் இல்லை.

பார்ப்பனரல்லாத ஜமீன்தார்கள், பிரபுக்கள், லேவாதேவிக் காரர்கள், வியாபாரிகள் என்போர்களோ ஏழைகளை வதைத்துப் பட்டினிபோட்டு ஏமாற்றி கொள்ளையடித்து பல லட்சக்கணக்கான சொத்துக்களைச் சேர்த்து குட்டிச் சுவர்களாக விளங்கும் கோவில்களைக் கட்டுவதும், அங்கு பார்ப்பனத் திருவிழா செய்வதும் பார்ப்பன மதப்பிரசார பள்ளிக் கூடங்கள், வேத பாடசாலைகள் கட்டுவதும், பார்ப்பனர்கள் சாப்பிட சத்திரங்கள் கட்டுவது

படிப்பகம்

www.padippakam.com



மான கொடுமைகளைச் செய்வதற்காகவே தங்கள் பணங்களை உபயோகிக்கின்றார்கள். பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களோ தங்கள் செல்வாக்கு முழுவதையும் பார்ப்பன நன்மைக்கே உபயோகிக்கிறார்கள், இல்லாவிட்டால், அவர்களுடைய உத்தியோகத்திற்கும், வாழ்வுக்கும் ஆபத்தாய் முடிந்து விடுகின்றது. பார்ப்பனரல்லாத சந்நியாசிகளின் சங்கதி சொல்லவே வேண்டியதில்லை எனலாம். சுருங்கக் கூறினால் இயற்கைக்கு விரோதமான இன்பத்தை அனுபவிப்பதே அவர்களது தபசாகி விட்டது. இனி, மீதி இருக்கும் பாமர மக்களோ மேல் கண்ட பெரிய ஆசாமிகள் என்பவர்கள் நடப்பதைப் பார்த்து அவர்களைப் பின்பற்றி மேலும் தங்களை உயர்ந்த ஜாதியான் என்றும், பக்திவான் என்றும் "சனாதன இந்து" என்றும் சொல்லிக் கொள்வதற்கே ஆசைப்பட்டு விபூதியையும், நாமத்தையும் பூசிக் கொள்வதும் யாத்திரையும், சடங்கும் செய்வதுமான வாழ்க்கையிலேயே தமது சம்பாதனையைகூடப் போடுவதுமாய் இருக்கிறார்களேயொழிய அய்யோ பாவம் மனிதத்தன்மை இன்னது என்பதைப் பற்றி ஒரு சிறு கவலையும் இல்லாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் மக்களின் சுயமரியாதை எங்கே இருக்கின்றது? எப்பொழுது வரும் என்பதைப்பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள். நேயர்களே!

உங்கள் மனம் பதறவில்லையா? உங்கள் அறிவு வெட்கப்படவில்லையா? நீங்களும் மக்கள் என்று எண்ணிக் கொள்ள உங்கள் எண்ணம் இடம் கொடுக்கின்றதா? உலகத்தில் மானமற்ற மக்கள், ஈனம் உற்ற மக்கள், சுயமரியாதை இன்னதென்று உணராத மக்கள் என்பவர்கள் எங்கிருக்கின்றார்கள்? அவர்கள் யார்? என்பதைச் சற்று நிதானமாய் தேடிப் பார்த்தால் உங்களைத் தவிர வேறு யாரையாவது கண்டு பிடிப்பீர்களா? போதும் போதும். இனியாவது, உங்கள் முயற்சியை சற்று சுயமரியாதைப் பக்கம் திருப்புங்கள். தேசிய 'நரகத்தில்' அழுந்தாதீர்கள். கடைந்தெடுத்த அயோக்கியர்களுக்கும், துரோகிகளுக்கும், ஈன வயிறு பிழைப்புக்காரருக்கும், அறிவிலிகளுக்கும் அதை விட்டு விடுங்கள். தமிழ்த் தாயின் மானத்தைக் காப்பாற்ற முன் வாருங்கள்.

சமீப காலத்தில் நடைபெற வேண்டிய சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்கு வரிந்து கட்டி முன் நில்லுங்கள். உங்கள் விண்ணப்பங்களில் உங்கள் ரத்தத்தைக் கொண்டு கையெழுத்துச் செய்து அனுப்புங்கள். உங்கள் சொத்துக்கள் என்பதில் ஒரு பகுதியை இப்போதே ஒதுக்கி வைத்து விடுங்கள். புரட்டு பிரசாரங்களை வெறுத்துத் தள்ளி பாமர மக்கள் உண்மை இன்னது, போலி இன்னது, சத்தியம் இன்னது, பொய் இன்னது என்று உணரும்படி செய்யுங்கள்; சுயமரியாதைக்கு உழைக்கும் உண்மைப் பத்திரிக்கைகளை எல்லாத் தமிழ் மக்களும் படிக்கும்படி செய்யுங்கள். இனி உறங்காதீர்கள். பார்ப்பனர்களின் மதத்தின் மூலமாகவாவது, புராணங்கள் மூலமாகவாவது, அதில் உழலும் பண்டிதர்கள் மூலமாகவாவது அரசியல் பார்ப்பனரல்லாதார்கள் மூலமாகவாவது தமிழ் மக்கள் தலையெடுக்கக் கூடுமென்றோ நினைப்பதை அடியோடு மறந்து விடுங்கள், மறந்து விடுங்கள்! ●●

(19.2.1928-"குடி அரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை.)

---

(தமிழன் குருதி .... முதல்பக்கத் தொடர்ச்சி)

வளர்த்துக் கொள்ளவே இல்லை. தமிழர் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்றவர்களின் நிலை இப்படி.

இவர்கள் சொந்த நாட்டிலே சோற்றுக்கு வழியின்றி, அண்டை மாநிலங்களிலே வயிற்றுப்பாட்டை போக்கிக் கொள்ள போராடிக் கொண்டிருப்பவர்கள்.

○○

இனி - நடுத்தர வர்க்கத் தமிழர்கள் — இவர்கள் ஒரு அரை நூற்றாண்டுக்கும் முன்னே அண்டை மாநிலங்களிலே சென்று குடியேறியவர்கள். பொருளாதாரத்திலே உயர்ந்திருப்பதனால் பிற சமுதாய மக்களுடன் கலந்து பழக ஓரளவிற்கு வாய்ப்புடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் இந்தத் தமிழர்கள் கீழ்த்தட்டிலிருக்கின்ற தமிழர்களை சக மனிதர்களாகவே மதிப்பதில்லை. பண வசதி ஒன்றையே தங்கள் தகுதியாகக் கொண்டு தாங்கள் தமிழர்கள் என்பதையே மறந்து – மறைத்து வாழ்கின்ற இடத்திற்கேற்ப தமிழ்ச் சமுதாயத்திற்கு கேடு பயக்கின்றார்கள்.

தமிழ் நாடாகட்டும், அண்டை மாநிலங்களாகட்டும் தமிழர்கள் சுயமரியாதையற்றவர்களாக, வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

மறைந்த வி. கே. கிருஷ்ண மேனன் (நேருவின் அமைச்சரவையிலே பல பொறுப்புகளை வகித்தவர். ஐக்கிய நாடுகள் மன்றத்திலே இந்திய நாட்டின் பிரதிநிதியாக செயலாற்றியவர்) மலையாளி. தன் வாழ்நாளின் இறுதிவரை ஒரு மலையாளியாகவே வாழ்ந்தார். பிறப்பால் மொழியால் மலையாளியாகவும் தேசத்தால் இந்தியனாகவும் காட்டிக் கொண்டவர்.

மலையாளிகள் அனைவரும் இத்தகைய மனப் போக்குடையவர்களே. சாயாக்கடை நாயரிலிருந்து இந்திராகாந்தியின் உள்துறைச் செயலாளராக இருந்த பி.சி. அலெக்சாண்டர் வரை இந்த மனநிலையிலுள்ளவர்களே. இது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

இமய மலையின் அடிவாரத்திலே இருக்கின்ற ஒரு மலையாளிக்குத் துன்பம் நேர்ந்து விட்டால் இந்திய நாட்டிலிருக்கின்ற எல்லா மலையாளிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுப்பார்கள்.

பார்ப்பனர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்கள் எங்கு வாழ்கின்றார்களோ அங்கே பேசப்படுகின்ற மொழி அவர்களுடைய மொழியாகிவிடுகிறது. ஆனால் உலகம் முழுதும் பரவிக் கிடக்கின்ற பார்ப்பனர்களின் தாய் மொழி சமக்கிருதம்தான். எல்லா சமூகத்தினரையும் தங்களுக்குச் சேவை புரிய பிறந்தவர்கள் என்கின்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இவர்கள். தமிழனைத் தவிர, தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எல்லா மொழிக்காரர்களும் தங்கள் தங்கள் மொழிக்காரர்களை அரவணைப்பதும் ஊக்குவிப்பதும் ஒரு நடைமுறைப்பழக்கமாகவே இருக்கிறது. ஆனால் தமிழனுக்கு ஏன் இன்னமும் சொரனை வரவில்லை?

தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் பிற மொழியினரின் ஆதிக்கம் வலுத்து வருகின்றது. இன்னும் பத்தாண்டுகளுக்குள் தமிழர்கள் சென்னை நகரத்திலேயே அகதி முகாம்களில் தஞ்சமடைந்தால் வியப்படைய ஒன்றுமில்லை.

இன்னும் ஒரு இருபத்தைந்து ஆண்டுகள் சென்றால் தமிழகத்தின் பெரு நகரங்கள் தமிழரல்லாதவர்களிடம் சென்றுவிடும் ஆபத்து நாளும் வளர்ந்து வருகின்றது. ஆனால் இவ்வளவு பேராபத்துக்களையும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள முயற்சிப்பதாகக்கூட தெரியவில்லை.

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் என்பது போய், இன்று தமிழ்நாட்டு வீதியெல்லாம் ஆங்கில முழக்கம் கேட்கின்றது. இல்லங்களிலே இந்தி முழக்கம் கேட்கின்றது. உடைகளிலே வடகத்தி வாடை. உணவு வகைகளிலும், பெயர்களிலும் வேற்று மொழி பேசுவோர் ஆதிக்கம்! பொருளாதாரத்திலே பிற மொழிக்காரனுக்கு அடிமையிலும் அடிமையாக இருக்கின்றான் தமிழன். ஆனால் உணரவேண்டிய தமிழர்கள் உணரவில்லை. தன்னுடைய இனம் இப்படிக் கேவலப் படுத்தப்படுகின்றதே என்கின்ற மான உணர்வு இவனுக்கு இல்லாமலே போய் விட்டது.

இந்தியாவாக இருந்தாலும், ஈழமாக இருந்தாலும் தமிழன் பாதிக்கப்படுகின்றான் என்றதும் கொதிப்படையாத தமிழனை தமிழன் என்று எப்படிச் சொல்வது?

தென் ஆப்பிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடும் நெல்சன் மண்டேலா – இருபத்தாறு ஆண்டுகள் சிறையிலிருந்தார். எவ்வளவு உயிர்களை பலி கொடுத்திருக்கின்றார்கள்; இன்னமும் பலி கொடுத்து வருகின்றார்கள். இந்தியாவிலே பஞ்சாபிகள் தங்களின் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள நாளும் எவ்வளவு உயிர்களை பலியாகக் கொடுத்து வருகின்றார்கள்.

சீக்கிய தலைவர்கள் எவ்வளவு கொடுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அத்தகைய தலைவர்கள் தமிழரிடையே இல்லை! அதற்குக் காரணம் காலகாலமாக தமிழர்களிடையே ஊறி வந்திருக்கின்ற அடிமைத்தனமன்றி வேறொன்றுமில்லை!

தமிழ் வாழ்வதும், வீழ்வதும் தமிழனின் நாளைய நிலைப்பாட்டைப் பொறுத்ததே!


கடல்போலும் எழுக!
கடல் முழக்கம் போல் கழறிடுக
தமிழ் வாழ்கென்று!
கெடலெங்கே தமிழினம்!
அங்கெலாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!

●●

படிப்பகம்

www.padippakam.com





# தமிழீழம் ஓரளவுக்கு வந்து விட்டது

□

சுஜாதா

**பிபிஸி 'உள்கதை'** (Inside Story) என்று எல்டிடிஈ இயக்கத்தின் கோட்டைக்குள் நுழைந்து முதன் முறையாக மேற்கத்திய டெலிவிஷனில் பிரபாகரனை சந்தித்து பேட்டி எடுத்து சரித்திரம் படைத்ததை உங்களில் சில அதிர்ஷ்டாத் மாக்கள் ஸ்டார் டிவியில் பிபிஸி சானலில் சென்ற மாதம் பார்த்திருக்கலாம்.


புலிகளின் நிஜ சண்டைகளையும், நிஜ மரணங்களையும் யாழ்ப்பாணத்தின் நிஜ நிலையையும் காட்டினார்கள். நம் நாட்டு தூர்தர்ஷன் இன்னமும் வலது மேல் மூலையில் நரசிம்மராவ் போட்டோ காட்டிக்கொண்டிருக்கிறது. அண்டன் பாலசிங்கம் தன் பிரிட்டிஷ் மனைவியுடன் வழி நடத்த அந்த இளம் சிறுவர்களும் சிறுமியரும் கொரில்லா போராட்டப் பயிற்சி பெறுவதும் பயிற்சி நிறைவு பெற்றதும் அந்தப் பெண்களுக்கு தாலிபோல் சயனைடு குப்பிகள் கழுத்தில் அணிவிக்கப்படுவதும் போரில் இறந்த பெண் போராளிகளின் சடலங்கள் யாழ்ப்பாணத்தில் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு இரங்கல் கூட்டத்தில் சிலாகித்துப் பேசிவிட்டுப் புதைக்கும்போது என் பொண்ணு போயிருச்சு நான் என்ன பண்ணுவேன், என்று தகப்பன் கதற, தாய் அவரைத் தடுத்து 'முதல்ல வருத்தமாகத்தான் இருந்திச்சு அப்புறம் நாட்டுக்காகத்தானே செத்தாங்கன்னு சமாதானமாயிருச்சு' என்று கண்ணீரை மழுப்புவதும் குண்டுகள் பொருந்திய லாரியை எதிரிகள் கோட்டை மேல் நேராக நிச்சய மரணத்தை நோக்கிச் செலுத்திய மில்லரையும் யாழ்ப்பாண நினைவாலயத்தின் சுவர்களில் பதித்திருக்கும் போட்டாக்களின் இனிய இளைய முகங்களைத் தொட்டு முத்தமிடும் தாய்மார்களையும், கனடாவில் விமான இஞ்ஜினியராக இருந்து 1983ல் விடுமுறைக்கு வந்தபோது கொழும்பு படுகொலைகளைப் பார்த்ததும் அனைத்தையும் துறந்து காடுகளில் போராடத் தீர்மானித்த விட்ட சங்கர்; ஷெல் வெடியில் இரண்டு கைகளையும் இழந்து இளம் பெண் கூட்டாளிகள் சாப்பாடு கொடுக்க "காலால எளுதப் பளகிட்டேன் முழங்காலால துப்பாக்கியை 'கொக்' பண்ண முடியறது சந்தோஷமாயிருக்கு" என்று இயல்பாகப் பேசுவது அனைத்தையும் பார்த்தபோது பலர் மனம் மாறியிருப்பர் என்பது சத்தியம். குழந்தைகளுக்கான பூங்காவில் 'சீஸா'வின் கைப்பிடி கூட ஏகே 47 வடிவில் இருக்க பல கையில் புலிப்பட்டைகள் பூசியிருக்க யாழ்ப்பாணத்தின் இதயத்தில் எல்டிடிஈ விதைக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை.

தமிழீழம் ஓரளவுக்கு வந்துவிட்டது என்றுதான் தெரிகிறது. யாழ் நகரில் அதிகாலையில் பொது இடங்களில் புலிகளின் செய்தி அறிவிக்கிற லவுட் ஸ்பீக்கர்கள் தொடர்ந்து "இளமைக் காலநினைவுகள் யாவும் இழந்த வீரர்களே" என்று பாடுகின்றன. நகர மக்களினூடே இன்னும் அரும்பு மீசை துளிராத சிறுவர்கள் தோளில் ரைஃபிள் தாங்கி தொளதொள வென்ற சீருடையுடன் உலவுகிறார்கள். யாழ்நகரில் தமிழீழம் இருக்கிறது. ஆனால் ஆஸ்பத்திரி இல்லை, பள்ளிகள் இல்லை, விளக்கு இல்லை, பெட்ரோல் இல்லை, படிப்பு இல்லை! இருப்பது ஒன்று மட்டுமே - நம்பிக்கை.

பிரபாகரன் கண்களில் அறியாமையுடன் 'ராஜிவ் கொலைக்கு எல்டிடிஈ இயக்கம் காரணமில்லை' என்கிறார். பிபிஸி நம்ப மறுக்கிறது.

கவிஞர் சேரன், நல்ல இங்கிலீஷில் பேசிய கொழும்பு ஸோஷியாலஜிஸ்ட் தமிழர். இவர்கள் எதிர் அபிப்ராயங்கள் சொன்னாலும் பொதுவாக அந்த நிகழ்ச்சி எல்டிடிஈக்கு சாதகமாகத்தான் இருந்தது. இந்திய கோணத்திலிருந்து யாரும் பேட்டி காணப்படவில்லை.

நிகழ்ச்சியை கண்டதும் எனக்கு உடனே புலப்பட்டது இதுதான்: யாழ்பாணத் தமிழர்கள்வேறு இவர்கள்புறநானூற்றுக் காலத்திலிருந்து நேராக இறங்கி வந்த தமிழர்கள். என் மகன் எங்கே என்று கேட்கிறாய், புலி தங்கியிருந்த குகைபோல என் வயிறு, போர்க்களத்தில் இருப்பான் போய்ப் பார் என்று சொல்லும் காவற்பெண்டின் வம்சம் ஈழத்தின் ஆழத்தில் வளர்ந்திருக்கிறது.



மெயின்லாண்டு தமிழர்கள் கனவுக்கன்னி குஷ்புவைப் பற்றி ஜொள்ளு பார்ட்டியும் கவிதைப் போட்டியும் நடத்திக் கொண்டிருக்கும் போது, ஈழத்துக்காரர்கள் பதின்மூன்று வயது பெண்களை காட்டில் அனுப்பி ரத்தம் சிந்திக்கொண்டு முற்றங்களில் எமர்ஜென்ஸி ஆப்பரேஷனில் ஷெல்லடி பட்ட முழங்கால்களை நீக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை செலுத்துவது என்ன? நாட்டுப் பற்றா இனப் பற்றா இல்லை பயமா?

●●

□
நன்றி
கணையாழி
ஜனவரி 1993
□


படிப்பகம்

www.padippakam.com



# தலித் இலக்கியம் என்ன—ஏன்?

தி. சு. சதாசிவம்



**மராத்திய மாநிலத்தில் தோன்றி ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக பல்கிப் பெருகிவரும் ஒடுக்கப்பட்டோரின் இலக்கியமான 'தலித்' இலக்கியமும் அதன் போக்கும் கருநாடகத்திலும் தன் வீரியத்தை விதைத்து தனிப்பெரும் இலக்கியமாயக வளர்ந்து, இன்று தமிழகத்தின் சமூகச் சிந்தனையாளர்களின் எண்ணத்திலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**

நாட்டின் சாதிய அடுக்குமுறையில் உயர்தட்டுக்களில் அமர்ந்துள்ள சில குறிப்பிட்ட சாதிகளின் இலக்கியமாகத்தானே அவைகள் இன்னமும் இருக்கின்றன. இந்நாட்டின் மற்ற 4,500 சாதிகளைப் பிரதிபலிக்கும் வெளிப்பாடுகள் இலக்கியத்தில் எங்கே, எப்படி காட்டப்படுகின்றன? இலக்கிய வளர்ச்சியைத்தான் பாருங்களேன்! மேலை இலக்கியங்களில் சர்ரியலிசம் முதலான பல்வேறு வடிவங்கள் கிளை பரப்பியுள்ளன. நாம் எங்கே இருக்கிறோம். கனவுகளையே விதைத்து அதிலேயே காலம் கழிக்கின்றோம். இது இறுகிப்போன 'கிளாசிகல்' பார்ப்பனிய அமைப்புமுறை. இதை நாங்கள் நிராகரிக்கின்றோம். எதிர்த்துப் போராடுகிறோம். ஆகையினால்தான் "தலித்" இலக்கியம் வேறுபட்டு நிற்கிறது. அரசியல் அதிகாரம் எப்போதுமே தீண்டப்படாதவர்களுக்கு எதிராகவே செயல்பட்டுவந்துள்ளது. எங்களுடைய எழுத்து, அரசியல் நடவடிக்கை, கலாசார இயக்கம் போன்றவற்றையும் கூட நசுக்கவே முயன்றுள்ளது. கடந்த 50 ஆண்டுகளாக எங்களுடைய குரலையும் உணர்வையும் வெளிப்படுத்த நாங்கள் கற்றுக்கொண்டுள்ளோம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வேதனைகளைத் தாங்கியும் ஊமைகளாகவுமே இருந்த எங்களுக்கு இது பெரிய முன்னேற்றமாகப்படுகின்றது. அதனால்தான் உறுதியாகக் கூறுகிறோம்—இந்த "தலித்" இலக்கியம்தான் இந்திய இலக்கியத் தன்மையையே மாற்றப் போகிறது என்று."

சிவானந்த் கனாவி என்னும் மராத்திய திறனாய்வாளர் முன்வைப்பது போன்ற பல கேள்விகள் பிற சிந்தனையாளர்கள் – படைப்பாளர்கள் இடையிலும் இல்லாமலில்லை. "இவ்வகை பாணியில் படைக்கப்பட்ட கவிதைகளின் வியத்தகு உயர்இலக்கியத்தரம் இந்த இலக்கியப்பாணிக்கு பின்னால் உள்ள 'தலித்' என்னும் சொல்லுக்கு உரிய தகுதி என்ன என்று அறிய என்னைத் தூண்டுகின்றது. இது எதைக் குறிக்கின்றது? இது ஒரு குறிப்பிட்ட சமூகத்திலிருந்து வந்த எழுத்தாளர்கள் படைத்த இலக்கியம் என்பதையா? இவ்வாறும்கூட இலக்கியத்தை வகைப்படுத்த முடியுமா? அப்படியென்றால், சத்திரிய இலக்கியம், பார்ப்பன இலக்கியம், முசுலீம் இலக்கியம், லிங்காயத்து இலக்கியம் என்பன போன்ற வெறுப்பூட்டும் வகைகளும் இருக்கலாம்தானே?"

இவ்வாறு கேட்கும் அந்த திறனாய்வாளர் பின்வருமாறு அறிவுரையும் கூறுகின்றார். "அந்த எழுத்தாளர்களின் முக்கிய நோக்கம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாரின் வாழ்க்கையையும் அபிலாசைகளையும் படம்பிடித்துக் காட்டுவதைத்தான் அந்த அடையாளம் சுட்டிக்காட்டுகிறதென்றால், அந்த எழுத்தாளர்களுக்கே அது பெரும் அநீதியை விளைவிக்கின்றது என்பது தான் உண்மை. குறிப்பிட்ட சமூகமக்களின் வாழ்வில் நிகழும் அவலங்களின் வெளிப்பாடுதான் இந்த இலக்கிய படைப்புக்கள் என்றாலும், பெரும்பாலான படைப்புக்களில் குறிப்பாக கவிதைகளின் உள்ளுணர்வு — பெரும்பான்மை சமூகத்தினர் பல்லோரது வாழ்நிலை உணர்வையே எதிரொலிப்பதாகவே இருப்பதால் இந்த 'தலித்' என்ற அடையாளம் இவ்வகை இலக்கியத்திற்கு பொருத்தமானதுதானா? என்பதே என் கேள்வி. கதை, கட்டுரை, உரைநடை, கவிதை போன்ற எல்லாத் துறைகளிலுமே உயர்இலக்கியத் தரம் கொண்ட இப்படைப்புகள் பொதுவான நீரோட்டத்துடன் ஒட்டமுடியாத வகையில் "தலித்—இலக்கியம்" என்று தனிமைப்படுத்திக் கொள்வதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை" என்று தொடங்கி, அண்மையில் ஆங்கிலத்தில் வெளிவந்த "விஷமான ரொட்டி" என்னும் நூலின் மீதான தன் திறனாய்வைத் தொடர்கின்றார்.

ஆனால், அந்நூலின் தொகுப்பாளர் அர்ஜுன் டாங்ளே, "தலித்இலக்கியம் என்பது வெறும் இலக்கியமன்று. அது சமூகமாறுதலுக்காக பாடுபடும் ஒடுக்கப்பட்டோரின் இயக்கத்தோடு தொடர்புடையது; பின்னிப் பிணைந்தது. அதுதனித்துத்தான் வெளிப்படும். பொதுவான இலக்கிய நீரோட்டத்தோடு சேர்ந்து அடையாளம் இழந்து போவதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது" என்கிறார். "தலித் சிறுத்தைகள்" இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் அவ்வியக்கத்தைத் துவக்கியவர்களில் ஒருவரும் இன்றைய இந்திய பாரதியக் குடியரசுக் கட்சியின் மாநிலத்தலைவருமான அர்ஜுன் டாங்ளே இடதுசாரி கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். இவரது கவிதைப் பாடல்களும் சிறுகதைகளும் பலராலும் பேசப்படுபவை. இவரது 'சாவானி ஹால்தே ஆஹே' என்னும் செய்யுள் வடிவ பாடல் தொகுப்பு 1978-ல் மகாராஷ்டிர அரசின் இலக்கியப் பரிசைப் பெற்றது. அவரது "தலித் சாஹித்யா ஏக் அப்யாஸ்" பல்கலைக்கழகங்களில் குறிப்புப் பாடநூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

"தலித் சிறுத்தைகள்" இயக்கத்தை துவக்கிய மற்றொரு உறுப்பினரான நாம்தியோதாஷல், அவரே வர்ணித்த 'பூமியில் நரகமான பம்பாயின் சிவப்புவிளக்குப் பகுதியான காமாத்திபுரத்தில் வளர்ந்தவர். இப்பகுதி—விலைமாதர், தெருப்பொறுக்கிகள், கூட்டிக் கொடுப்போர் சிறுகுற்றவாளிகள், வேலையற்ற குடிகாரர்கள் போன்றோர் நிறைந்தது. இப்பின்னணியில் பலவாறு பாதிக்கப்பட்ட இவரின் படைப்புக்கள், தலித்களின் சினத்தையும் விருப்பங்களையும் பிரதிபலிக்கும் கவிதைகள் என்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டனவாகும். அரசியல் ரீதியாக நிலையாக நிற்காதவர்' என சக்தோழர்களால்—எதிரிகளால் விமர்சனம் செய்யப்பட்டாலும் இவரது கவிதைகளாலும் பாடல்களாலும் இன்னமும் எல்லோரையும் ஈர்த்துக் கொண்டு வியக்க வைப்பவர். இவர் இலக்கியம் பற்றி பேசும்போது:

"இந்திய இலக்கியத்தின் குறைபாடே, ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட மேம்பாட்டு நய அணுகுமுறையுடனேயே அது இன்னமும் ஒட்டிக் கொண்டிருப்பதுதான். இன்றைய சமகால இலக்கியம் என்று சொல்லப்படுவதைத் தான் எடுத்துப் பாருங்களேன். மிக கவனமாக உயர்ந்தது என்று ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளைத் திரும்பத் திரும்ப எழுதுவதன் மறுவார்ப்புகள்தாமே அவை? இந்த

படிப்பகம்

www.padippakam.com



"பரவலாக அறியப்பட்ட தலித் எழுத்தாளர்கள் தலித் தன்மை வாய்ந்தஒரு அடையாளத்தை பிரதிபலிக்கின்றனரா?" என்று பரவலாக கேட்கப்படும் கேள்விக்கு நாம்தியோ தாஷெல் கூறும் பதில் இதுதான்.

'தலித் எழுத்தாளர்கள் பற்றிபேசப்படும் தனி அடையாளம் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. தலித் எழுத்தாளர்கள் எந்தவொரு அடையாளத்தையும் யார் மீதும் வலுக்கட்டாயமாக திணிப்பதாக நான் எண்ணவில்லை. சமகால தலித் எழுத்துக்களில் விலைபோகும் "கோபம்", "கசப்புணர்வு" போன்றவைகளைப் பற்றி நீங்கள்–அமைப்புரீதியான திறனாய்வளர்கள் கேட்டால் அந்த எழுத்துக்களில் உள்ள மற்ற உயர்ந்த தன்மைகளை நீங்கள் பார்க்க மறுக்கிறீர்கள் என்றுதான் கூறுவேன்.

தலித் இலக்கியமும் எழுத்தும் காலப் போக்கில் பண்பட்டு வந்துள்ளன. நானே முன்பு எழுதிய போக்கிலிருந்தும் விஷயங்களிலிருந்தும் பெரிதும் மாறுபட்டு வந்திருக்கின்றேனே! என்னுடைய பழைய தொகுப்பான "பசி"க்கும் தற்போதைய வெளியீடான "கையாளாகாதவனின் தோட்ட"த்திற்கும் (காண்டு, பகீசா) நிறைய வேறுபாடுகள் உண்டு. "காண்டு பகீசா" என்னும் தலைப்பை (காண்டு என்னும் சொல்லுக்கு சரியான நேர்பொருள் ஆண்தன்மையற்ற-அலி) ஏன் வைத்தேன் என்றால், என்னைப் பொறுத்தவரையில் நாடுமுழுக்க இப்படிப்பட்டவர்கள்தாம் நிரம்பியுள்ளனர். மகாராஷ்டிர அரசுக்கு கோபம்; இப்படிப்பட்ட தலைப்பை எப்படி வைக்கலாம் என்று. பரிசு கொடுப்பதை தடுத்துவிட்டனர். இவர்களுக்காக, ஒரு பிற்போக்குத்தனமான கற்பனையான காதல் ததும்பும் தலைப்பையா வைக்க முடியும்?

தலித் இலக்கியத்தின் மூலமாக நாங்கள் எதை சாதிக்கப் போகிறோம் என்று கேலி பேசுபவர்களும் உண்டு. எங்களுக்குக் கவலையில்லை. என் வீட்டுச் சுவரிலே தொங்கிக் கொண்டிருக்கும் மகாராஷ்டிர அரசு அளித்த பரிசுப் பத்திரங்களுக்கும் "சோவியத் நாடு" பரிசுச் சான்றிதழ்களுக்கும் என்னைப் பொறுத்தவரையில் எந்த அர்த்தமும் இல்லை. சூழ்நிலைகள் மாறியிருப்பினும் தீண்டாமை தீண்டாமையாகவே நிலைத்திருக்கும்வரை எங்களின் கருத்துக்களும் கலையிலக்கிய நோக்கங்களும் மாறிவிட்ப் போவதில்லை. நாங்கள் சமூக அமைப்பிற்கு எதிராக போராடுகிறோம். அவர்கள் கையிலெடுத்திருக்கும் அதே கலை இலக்கிய ஆயுதங்களையும் நாங்களும் கையிலெடுக்கிறோம். அவர்களைவிட பயனுள்ள வகையில் பயன்படுத்துகிறோம். அவர்கள் கையாளும் துறைகளிலேயே ஊடுருவுகிறோம். கடைசியாக அத்தனையையும் மாற்றுவோம்."

எண்ணற்ற தீவிரமான தலித் படைப்பாளிகள் வீரியமுடன் மராத்திய இலக்கிய அரங்கில் தோன்றியது என்னவோ எழுபதுகளில் தோன்றிய "தலித் சிறுத்தைகள்" இயக்கத்திற்கு (தலித்பேந்தர் இயக்கம் துவக்கப்பட்ட நாள் ஜூலை 9, 1972) முன்னோடியாகத்தான். ஆனால் அதற்கும் முன்பே டி.கே. பேடேகர், பாபுராவ் பாகுல் போன்ற இடதுசாரி இலக்கியப் படைப்பாளர்கள் சிலரால் தோற்றுவிக்கப்பட்ட 'பிரகத் சாகித்ய சபா' என்னும் இலக்கிய அமைப்பு மராத்திய மாநிலத்தில் இயங்கிக் கொண்டுதான் இருந்தது. "இந்த நாட்டில் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய கருத்துக்களை இந்த எழுத்துக்கள் எங்களுக்குத் தரவேண்டும் என்றுதான் நாங்கள் எதிர்பார்த்து அவைகளையே சார்ந்திருக்கிறோம். எனவே அவை நேர்மையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. இந்த எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டே எங்களின் பெரும்பாலான சிந்தனைகள் அமைகின்றன. வாழ்க்கையில் எங்களின் எல்லா செயல்பாடுகளும் இந்த எழுத்துக்களைச் சார்ந்தே உள்ளன" என்று பெரும்பாலான தலித் இளைஞர்கள் எதிர்பார்த்ததால் தலித் படைப்பாளர்களின் பொறுப்பும் அதிகரித்தது. ருசியா, சீனம், வங்காளம் போன்ற மொழிகளின் மேன்மையான இலக்கியங்களைப் படித்த பிறகு மராத்தி இலக்கியத்தில் ஒரு வெற்றிடம் இருப்பதை இவர்கள் உணர்ந்தனர்.

டாக்டர் அம்பேத்கரின் புகழ்பெற்ற மஹத் சத்யாகிரகம் (1927-ம் ஆண்டு) நடந்து 63 ஆண்டுகளுக்குப்பிறகு பம்பாய்க்கு அருகிலுள்ள அதே மஹத் என்னுமிடத்தில் நடந்த தலித் கல்வியறிவு மாநாட்டில் பாபுராவ் பாகுல் "மனிதன்தான் தலித் இலக்கியத்தின் உயிர்நாடி; இந்த மனிதன்தான் சமத்தும், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றைக் கொண்ட முழுமையான புரட்சியைக் கொண்டுவர முடியும்" என்று முழங்கினார். நாம்தியோ தாஷெல் தன் "கோல்பிதா" என்னும் கவிதைத் தொகுப்பில் "இந்த அழுகிப்போன சமுதாயத்தை சுட்டெரிக்க கணக்கற்ற சூரியன்கள் என் குருதியில் கொப்பளிக்கட்டும்; அப்போதுதான், அந்த புதிய சமூகத்தில்தான் மனிதன் மனிதனை மட்டுமே பாடுவான்" என்று எழுதினார்.

இப்படித் துவங்கிய போக்கு நாளடைவில் மனிதனைப் பாட மறந்து மற்றவைகளையே பாட பழக்கப்படுத்தப்பட்டுப் போனதால் இயக்கத்திலும் பிளவு ஏற்பட்டது. சமூகத்திலும் கொடுமைகள் அதிகரித்தன. ஒடுக்கப்பட்டோர் மீதான கொடுமைகள், மராத்வாடாவோடு மட்டும் நிற்கவில்லை: கீழ்வெண்மணி, பெல்சி, பிப்ரா, கரம்சேடு, விழுப்புரம், சுண்டூர், பர்பாணி, பீட், சுர்கூர் என்று பட்டியல் நீண்டு கொண்டே போனது. சலுகைக்காக மட்டும் போராட்டம், சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டம் என இருபிரிவாக தலைமை பிரிந்ததைப் போலவே தலித் இலக்கியத்திலும் இரு பிரிவு தோன்றியது. முதலாவது, பழமையானது; மிதவாத கருத்துக்களைத் தாங்கி சீர்திருத்த மனோபாவம் கொண்டது. இப்பிரிவைச் சார்ந்த படைப்பாளர்களில் சிலர் மார்க்சிய சிந்தனையின் ஆளுமைக்குட்பட்டிருந்தாலும் அடையாளம் தெரியாத வாசகனுக்கே ஒடுக்கப்பட்டோரின் அன்றாட அனுபவங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சாதி அடிப்படை சமூகத்தின் இறுகிப்போன தன்மையையும் மனிதாபிமானமற்ற செயல்களையும் அம்பலப்படுத்தினர்; உடனடியான சில சீர்திருத்தங்களை சமூகத்திடமிருந்து எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களின் எழுத்துக்களில் வீறுகொண்ட உணர்வுகளோ விடுதலைக்கான மொழியோ காணப்படவே இல்லை.

இந்திய இலக்கியத்தின் முகத்தையே மாற்றியமைக்கும்– என்று நாம்தியோ தாஷெல் கட்டியங்கூறிய இரண்டாம்வகை தலித் இலக்கியம், இந்திய அரசியல் போக்கின் தேவையாக இருந்து, எதிர்காலத்தில் மெல்லமெல்ல சமூகக்கட்டாயத்தின் விளைவாக பெரும் நீரோட்டத்துடன் கலக்கப் போகும் தன்மை கொண்டதாயினும், இன்று மிகவும் வீரியமிக்கதாகவும் நேரிடை விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் கிளம்பியது. தலைவிதித் தத்துவத்தையும் ஆன்மா, பிறப்புக்கேற்ற வாழ்வு எனும் சித்தாந்தத்தையும் போதித்த, சாதியமுறைமைகளை அழுத்தமாக வலியுறுத்திய இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்களை தகர்த்தெறிய கடுமையான தாக்குதலைத் தொடுப்பதே இவ்வகைத் தலித் எழுத்தாளர்களின் முதல் பணியாக இருந்தது எல்லா மரபுகளையும் உடைத்தெறியும் போக்கு கொண்டது இவர்களின் இலக்கிய பாணி.

இவர்களின் இவ்விரண்டாம் இலக்கியங்களைப் படைப்பவர்கள் பொறுமையிழந்தவர்கள்; தீவிரமானவர்கள்; வேகமும் வீரியமும் முரட்டுத்தனமும் மிக்கவர்கள். இந்த தன்மைகளையெல்லாம் அவர்கள் குறியீடுகளாக மாற்றி தங்களின் கவிதைகளிலும் உரைநடைகளிலும் பெரும்பாலும் ஆக்கிரமித்துக் கொள்ளும்படி பயன்படுத்தினர். இவர்கள் இன்றைய சமூகஅமைப்பு முறைகளை மட்டும் தீவிரமாக எதிர்க்கவில்லை; இந்த சமூக அமைப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் சமகால இலக்கியத்தில் நிலவிவரும், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பாணிகள், போக்குகள் ஆகியவற்றையும் கூட தாக்கி, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளையெல்லாம் கேள்விக்குள்ளாக்கி எல்லாவற்றிற்கும் எதிரான போக்குகளை, பாணிகளை–உள்ளடக்கம், உருவம் இரண்டிலுமே–பின்பற்றத் துவங்கினர். அதன் தொடர்ச்சியே இன்றைய தலித் (ஒடுக்கப்பட்டோர்) இலக்கியம். இவ்வுயிரோட்டமுள்ள போக்கு இனியும் வேலும் வளர்ந்து ஒரு மாபெரும் மாற்றத்தைத் தரும் என எதிர்நோக்குவோம்.

● ● ●

படிப்பகம்

www.padippakam.com



# போராட்ட எழுத்துக்கு ஒரு விருது



சர்வதேச கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்களின் கூட்டமைப்பு-INTERNATIONAL PEN. உலகப் புகழ்பெற்ற பல படைப்பாளர்கள் இதன் தலைவராகவும், உறுப்பினர்களாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அமைப்பு, தனது வருடாந்திர பரிசை இம்முறை ஈழத்தை சேர்ந்த செல்வி (செல்வநிதி தியாகராஜா)க்கு வழங்கியுள்ளது.

'PEN' அமைப்பு கார்ல்ஸ் வொர்த்தியால் தொடங்கப்பட்டது. இதன் பரிசை பெற்ற முதல் பெண்மணி ஜூலியஸ் பூசிக்கின் எழுத்துக்களை வெளிக்கொணர்ந்தவர். அவருக்கு அடுத்து ஈழத்துத் தமிழ்ப் பெண் கவிஞரான செல்விக்கு இவ்விருது கிடைத்திருக்கிறது.

செல்வி, ஈழத்தின் நெருக்கடியான போராட்ட சூழ்நிலையில் இத்துறையில் சேவை புரிந்தமைக்காக – சிறந்த போராட்ட கால இலக்கியங்களை படைத்ததற்காகவே இவ்விருது.

ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிக்குரலாக வெளிப்பட்ட "சொல்லாத சேதிகள்" என்ற தொகுப்பில் செல்வியின் இரு கவிதைகள் இடம் பெற்றுள்ளன. யாழ் பல்கலைக் கழகத்தில் நாடகத்திலும் அரங்கியலிலும் 2ஆம் ஆண்டின் சிறப்புப்பட்டதாரியான செல்வி, சிறந்த நாடக நெறியாளரும் நடிகருமாவார். 'தோழி' என்ற பெண்நிலை பத்திரிகையின் ஆசிரியர்.

அவரின் இருகவிதைகள் இங்கு வெளியாகிறது.

- ப செவ்வேள்

**1**

நெரிசல் நிறைந்த சென்னை நகரில்
எனது உணர்வை எனது கிளர்வை
எனது நேசத்தை எனது காதலை
எனது விரல்களின் மெல்லிய வருடலை
எங்ஙனம் உனக்கு உணர்த்த முடியும்?
சிலிர்க்கும் மழைச்சாரல் தெறிக்க
தவளைகள் பின்னணி இசைக்கும் இரவு.
குளிர் மிகுந்து நடுங்குமென்னுடல்
உனது இனிய அணைப்புக் கேங்கும்
பிரிதலின்றி கழிந்த பொழுதுகள்
கனவாய் மட்டுமே உணர்த்தும் கொடுமையை
எப்படி உன்னிடம் சொல்வேன்?

**2**

நான் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளேன்.
என்னை யாரும் கேள்வி கேட்டுத்
தொந்தரவு செய்யாதீர்கள்
நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது எனது இதயம்.

எந்த நேரமும்
விழுந்து வெடித்துவிடக் கூடும்
அசோகவனங்கள் அழிந்து போய்விடவில்லை
இந்த வீடே
எனக்கான அசோக வனமாயுள்ளது.
ஆனால்
சிறைப் பிடித்தது இராவணனல்ல. இராமனேதான்.


இராமனே இராவணனாய்
தனது அரசிருக்கையின் முதுகுப் புறமாய்
முகமூடிகளை மாற்றிக் கொண்டதை
பார்க்க நேர்ந்த கணங்கள் ...
இதயம் ஒரு முறை அதிர்ந்து நின்றது.

இந்தச் சீதையைச் சிறை மீள வருவது யார்?
அசோக வனங்கள்
இன்னும்
எத்தனை காலத்திற்கு?

புறாவும் அன்னமும் தூது செல்லும்
காலமா இது —
தென்றல் கூட இளமையிழந்து
மௌனமாய்......


மானுட நேயம் நோக்கிய வாழ்வை
படைத்திட முயல்கையில் எத்தனை தடைகள்!
கொடூரம் மிகுந்த விழிகள் தொட
வாழ்தலில் கசப்பு நெஞ்சை நெருடும்

மனிதம் மறந்து சவமாய்க் கிடந்து
வாழ்தலில் எனக்கு பிரியமேயில்லை!



www.padippakam.com





# ஒரு கறுப்பு நாள்

## சில சிந்தனைகள்

-பேராசிரியர் வி. எஸ். கார்த்தி

"இந்தியர்கள் அடிமையாக இருக்கத்தான் தகுதியானவர்களே தவிர ஆளப்பிறந்தவர்களல்ல" என்று பிரிட்டிஷ் நாட்டின் முந்நாளைய பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறியது உண்மைதான் என்று நிருபிக்கும் வகையில் டிசம்பர் 6ந் தேதி நடந்த 'பாபர் மசூதி தகர்ப்பு' சம்பவம் அமைந்துவிட்டது.

இன்று நடந்து வரும் நிகழ்ச்சிகள் இந்தியாவை சிதறடிக்கச் செய்து விடும் போல் தோன்றுகின்றன. உலக நாடுகள் மொழி-மத-இன அடிப்படையில் உடையத் தொடங்கிவிட்டன.

இந்தியாவை 'தேசிய இனங்களின் சிறைக் கூடம்' என்று ஒரு சாராரும், 'ஒரே இனம், இந்திய இனம்' என்று மற்றொரு சாராரும் கூறிவருகின்றனர். இந்தியா பல தேசிய இனங்களைக் கொண்ட உபகண்டம் என்பதே உண்மை. இந்தியா எந்த காலத்திலும் ஒரே நாடாக இருந்தது இல்லை. முகலாயர்கள் ஆண்ட இந்தியா வலுவான மைய அரசை ஏற்படுத்தியது. அதன் பின்னர் ஆங்கிலேயர்கள் 1858-இல் அகில இந்தியாவை ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்தனர். என்றாலும் நூற்றுக்கணக்கான சமஸ்தானங்கள் தனித்தே இயங்கின. 1950-இல்தான் முதன் முதலாக இந்தியா ஒரே நாடாக தோன்றிற்று. இதுதான் உண்மை வரலாறு.

இன்றைய இந்தியாவின் வயது 45 ஐ கடந்து விட்டது. இந்தியா இனி சிதறுமா? சிதறாதா என்ற வினா இன்று எல்லோர் மனதிலும் கிளம்பி விட்டது. பாபர் மசூதி தகர்க்கப்பட்டவுடன் நமது பிரதமர் சமய சார்பின்மையை கைவிட்டால், இந்தியா சிதறி சுக்கு நூறாகி விடும் என்று எச்சரித்துள்ளார்.

இதற்கு முன்னர் பஞ்சாபின் முதல்வராகவும், பின்னர் தமிழகத்தின் ஆளுநராகவும் இருந்த சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், அரசியல் சட்டம் 356-விதியைப் பயன்படுத்தி இராஜீவ் அரசு தன் அமைச்சரவையை பதவியிழக்கச் செய்த பொழுது, இன்று இந்தியா ஔரங்கசீப்பின் காலத்தை ஒத்திருக்கிறது என்று கூறினார். அதாவது முகலாயப் பேரரசின் வளர்ச்சியின் உச்சக்கட்டமும் ஔரங்கசீப்பின் காலம்தான் அதைப்போல வீழ்ச்சியின் தொடக்கமும் அவனுடைய காலம்தான் தோற்றுவித்தது. முகலாயர்களையும் ஆங்கிலேயர்களையும் எதிர்த்து போரிட்ட வீர மறவர்களான பஞ்சாப் இனத்தைச்சார்ந்த பர்னாலா சரியாகவே மைய அரசை எச்சரித்தார்.

மண்டல் குழு பரிந்துரைகள் சரியாக அமலாக்கப்படவில்லை என்றால் 'இந்தியா சிதறும்' என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



ஜனதாதளத்தின் தலைவர் இராமகிருஷ்ண ஹெக்டே ஒரு முறை "United states of India" (USI) மாநிலங்களின் கூட்டாட்சியை ஏற்படுத்த ஆலோசனை கூறினார்.

பாபர் மசூதி தாவாவில் திரை மறைவில் அரசியல் நடத்திய இராஜீவின் உறவினரும் ஆலோசகருமான சனாதன பார்ப்பனர் அருண்நேரு (3.1.93 இந்து) நரசிம்மராவ் சரியாக நடந்து கொள்ளவில்லை என்றும், ஆர். எஸ். எஸ், வி. இ. பரிசத், பஜ்ரங்தல், போன்றவற்றை தடை செய்ததன் மூலம் சிறுபான்மையோரை (இஸ்லாமியர்களை) திருப்தி செய்துள் ளார். அதனால்தான் இந்துக்கள் இப்படி கொதித்தெழுகின்ற னர் என்றும் பேசியுள்ளார்.

1986 இல் பாபர் மசூதியை பூட்டை உடைத்து திறந்து விடவும் 1989-இல் பாபர் மசூதி வளாகத்தில் சிலன்யாஸ் பூசை (கல்பூசை) நடைபெறவும் ஆவன செய்தவர் இவர் என்பதை மறந்துவிட வேண்டாம். அதுமட்டுமல்ல இராஜீவ் காலத்தில் உள்நாட்டு அமைச்சராக இருந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பூட்டாசிங்கின் வீட்டிற்குச் சென்றால் கூடவே தன்னுடைய பிளாஸ்கில் 'டீ' எடுத்துச் சென்று அருந்துவாராம். பூட்டா வீட்டில் டீ அருந்த மாட்டாராம். அப்படிப்பட்ட காஷ்மீர் பார்ப்பனர்தான் இராஜீவின் அந்த ரங்க ஆலோசகர்களில் ஒருவர். அவர் இன்று பாபர் மசூதி தாவாவில் நரசிம்மராவ் அரசு நடந்து கொண்ட விதம் இந்துக்களுக்கு எதிரிடையானது என்றும், இந்தியா சிதறும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது என்றும் ஓலமிடுகிறார்.

'பாபர் மசூதி தகர்ப்பை பாதுகாக்கத் தவறிய மைய அரசு பாரதத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறது?' என்று கலைஞர் கேட்ட கேள்வி ஆழமானதாகும். மதவெறிப் பிடித்த ஒரு குருட்டுக்கும்பல் சர்வவல்லமைபடைத்த இந்தியமைய அரசை செயழிலக்கச் செய்து விட்டதை எண்ணும் பொழுது இந்தியாவில் எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம்.

இந்தியோ, இந்து மதமோ இந்தியாவை நிச்சயம் ஒன்று படுத்தாது. இந்தியும், இந்து மதமும் இந்தியர்களை பிளவு படுத்தும் சக்திகள். டாக்டர் அம்பேத்கார் கூறியது போல் இந்து மதம் என்றால் பிரிவினைதான் என்று பொருள் படும். ஒவ்வொருவரும் தன்னை மதத்தால் அல்லது சாதியால் அல்லது மொழியால் அடையாளம் காட்டுகிறான். இந்தியன் என்றும், இந்து என்றும் ஏக இந்தியாவில் எவனும் இல்லை. இதுதான் உண்மை.

பாபர் மசூதியை இடித்த பின்னர் அதே இடத்தில் 1949-இல் திருட்டுத்தனமாக மசூதிக்குள் வைக்கப்பட்ட இராமர், சீதை, இலக்குவன் சிலைகளை மீண்டும் அங்கு வைக்கவும், பின்னர் வணங்கவும் அனுமதித்ததன் மூலம், மைய காங்கிரஸ் அரசிற்கும் பா.ஜ.கட்சிக்கும் இரகசிய உடன் பாடும், பேரமும் இருந்துள்ளன என்பதை நம்பவைக்கும் தடையங்களாகும்.

பாபர் மசூதி தாவாவில் நாம் இந்து-முஸ்லீம் என்ற மதப்போர்வையில் பிரச்சனையை அணுகவில்லை. வரலாற்றில் நடந்து விட்டதாகக் கூறப்படும் சம்பவங்களுக்கு பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கைகளை கண்டிக்கவும், இஸ்லாமியர்களும் இந்நாட்டின் குடிமக்களே என்ற அளவிலும் இஸ்லாமியர் களை ஆதரிக்கிறோம்.

மண்டல் குழு பரிந்துரைகளை அமலாக்கம் செய்த பொழுது, 'இந்து மறுமலர்ச்சி' கும்பல் ஒரு வாதத்தை முன் மொழிந்தது. அதாவது 'எப்போதோ நடந்துவிட்ட சமூகக் கொடுமை களுக்கு இப்பொழுதுள்ள தலைமுறையினரை இட ஒதுக்கீட்டின் மூலம் பழிக்குப்பழி வாங்குவது நியாயமா? என்றனர். அதே கும்பல் இன்று பாபர் மசூதி தாவாவிற்கு அந்த வாதத்தை வைக்க மறுக்கின்ற னர். 'மன்னர் ஆட்சியில் நடைபெற்றுவிட்ட காட்டு மிராண்டித் தனங்க ளுக்கு, இப்போதைய இஸ்லாமிய தலைமுறையினர் எந்த விதத்தில் பொறுப்பாவார்கள்?'

இஸ்லாமியர் ஆண்ட காலங்களில் சீக்கிய மதகுரு மார்கள் (ஔரங்கசீப் காலத்தில் தேஜ் பகதூரும் அதற்கு முன் ஜஹாங்கிர் காலத்தில் அர்ஜுன்சிங்கும் படுகொலை செய்யப்பட்டனர்) இந்து மதத்திற்காக போரிட்டு உயிர் விட்டனர். ஆனால் அன்றைய காலங்களில் இந்துமத சனாதன சாதுக்கள், குருமார்கள் 'செத்தநாய் செருப்பு கடித்ததைப் போல்' அடங்கிக் கிடந்தனர். இன்று பார்ப்பன பனியாக்களின் ஆட்சி என்றதும், இன்று ஒரு வாமதேவ் என்ற சாது கூறுகிறான், "அடுத்து மதுரா, வாரணாசி, பழைய தில்லியிலுள்ள ஜும்மா மசூதிகளை இடித்துத் தள்ளுவோம். இப்படிப் பல சோதா சாதுப்பேர்வழிகளெல்லாம் பேசுவதி லிருந்து இன்றைய ஆட்சி எப்படிப்பட்டது என்பதை உணர லாம். இன்றைய இந்தியாவின் அரசியல் சட்டம் இந்துக்களுக்கு எதிரிடையானது என்று கூறி, 69 பக்கங்களுக்கு ஒரு தேசிய விரோத பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர். இதை மைய அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் தமிழன் தன்னுரிமை கோரி டாக்டர் இராமதாஸ்தலைமையில் மாநாடு நடத்தினால் படாத இடத்தில் பட்டதைப் போல் பார்ப்பன பனியா பத்திரிகைகளும் அரசும் பதறின. இச்செயல்தான் இன்றைய இந்தியா ஆரிய இந்தியா என்பதை நிரூபிக்கின்றது.

இஸ்லாமியர்களை பழிவாங்கத் துடிக்கும் இந்துமத வெறியர்களை அடக்க பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் ஒன்றைக் கூறியுள்ளார். (1—1—93) "இந்துமதத்தால் சமத்துவம் மறுக்கப்பட்டு இழிவுப் படுத்தப்பட்ட மக்கள் சாதி அடிப்படையில் ஒன்று திரண்டு போராட வேண்டும்." இந்த அறிவிப்பைக் கேட்டதும் பா. ஜ. கட்சித்தலைவர் ஒருவர், 'சாதிவெறியை தூண்டுகிறார் லல்லு பிரசாத் யாதவ்' என்று துடிக்கிறார். மதவெறியை தூண்டினால், ஆதிக்க சாதிகளுக்கு நன்மை; சாதிவெறியை தூண்டினால் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை என்று நினைக்கிறார் போலும் லல்லு.

வரலாற்றில் நடந்துவிட்ட சம்பவங்களுக்கு பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்றால், இந்துமதத்தால் ஒடுக்கப்பட்டு இழிவுப்படுத்தப்பட்ட மக்கள் பழிக்குப் பழிவாங்க தலைப் பட்டால் இன்றைய இந்து மறுமலர்ச்சியில் முன்னணி சாதியினர் தலைவர்களின் கதி என்னவாகும் என்பதை இந்துமத வெறியர்கள் யோசிக்க வேண்டும்.

இன்று ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ, ஆளுநராகவோ, வேறு எந்த முக்கிய பதவிகளிலும் எந்த ஒரு இஸ்லாமியரோ, கிருத்துவரோ இந்துக்களின் ஆதர வில்லாமல் வரமுடியாது. அப்படியிருக்கையில் இஸ்லாமியர் களால் ஆபத்து என்பது பித்தலாட்டப் பிரச்சாரமாகும்.

'மேலும் மண்டலுக்கு பதில் மந்திர்' என்று இந்துக்களுக் குள்ளேயே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, இடஒதுக்கீட்டின் மூலம் 'அதிகாரக் கட்டமைப்பில்' பங்களிப்பதை இஸ்லாமியரோ, கிருத்துவரோ எதிர்க்கவில்லை. இந்துமத தீவிரவாதிகள்தான் மண்டலை எதிர்க்கின்றனர்.


இதிலிருந்து நமது (ஒடுக்கப்பட்ட மக்களின்) எதிரிகள் யார் என்பதை தெளிவாக உணரலாம்.

தமிழர்களாகிய நமக்கும் இந்து மறுமலர்ச்சிக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற அளவில் நாம் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். மொழிவழி தேசிய இனங்களின் கோரிக்கைகள் வலுப்பெறாமல் தடுக்கவே பார்ப்பன—பனியா கும்பல் 'இஸ்லாமியர் எதிர்ப்பை' தூண்டி விடுகின்றன. இது போன்ற நேரத்தில் நமது குறிக்கோளை மறக்காமல் செயல்படவேண்டும். மண்டலுக்குப் பதில் மந்திர் என்று செயல்பட்ட கும்பல்தான் இந்து வெறியர்கள். நாம் நமது பங்கை-உரிமையை அதிகாரக் கட்டமைப்பில் பெறவேண்டும். சமீபத்தில் தமிழகம் வந்த வி. பி. சிங் அவர்கள் மைய அரசு பணிகளில் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன என்றார். இதை நாம் கவனிக்க வேண்டும். 3 விழுக்காடே உள்ள பார்ப்பனர்கள் இவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருப்பதின் இரகசியம், அனைத்து அதிகார மட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தி வருவதுதான். எனவே நாம் மண்டல்குழு பரிந்துரைகளை செயல்படுத்தப் போராடவேண்டும். இல்லையேல் இந்தியா சிதறுவதை யாராலும் தடுக்க இயலாது. இதுவே எமது தமிழ்ப்புத்தாண்டு செய்தியாகும்.

படிப்பகம்

www.padippakam.com





# நாடகம்

**பாவண்ணன்**

வழக்கமாய் கிறிஸ்துமஸையொட்டி ஆரம்பிக்கிற நாடகப்போட்டி விழா இந்த வருஷம் நடக்குமா என்கிற சந்தேகங்கள் வலுத்துக் கொண்டே வந்தன. ஆறு மாசத்துக்கு முன்பேமுதல் கட்டத் தேர்வு முடிந்து பேரும், நாடகமும் பதிவாகிவிட்டது. அப்போது இருந்த நிலைமையே வேறு. இப்போது ஊர் நிலைமையே வேறு.தலைகீழாய்மாறிவிட்டது எல்லாம்.அங்கங்கே தீவைப்பு, கலவரம், சாவுகள். எங்களுக்குள் பரவிய பயமும் நடுக்கமும் சாதாரணமானதல்ல. நகரின் அசம்பாவிதங்கள் உருவாக்கிய பீதி மனசைக் குலைத்திருந்தது. நகர்க்குள் நடமாட நேர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் எதை முன்னிட்டும் எங்களுக்குள் பேசிக்கொள்வதை முழுக்க முழுக்கத் தவிர்த்தோம். குறிப்பாக தமிழில் எங்களை அறியாமல் மனசுக்குள் பதட்டத்துடன் ஓடும் எண்ணங்கள் துவள வைத்தன. திடுமென நெருங்கும் பெரிய கும்பல். 'பெரிய திப்பு சுல்தான்னு நெனப்பாடா ஓங்களுக்கு' என ஆத்திரம் உமிழும் குரல். அடி, உதை, குத்து. சிதறிச் சிதறி உறையும் ரத்தம். அப்படி ஒரு காட்சி. தீப்பந்தம் தூக்கிய ஒரு கூட்டம். குடலைப் பிடுங்கும் சாராயநாற்றம். வம்சத்தையே பழிக்கிற வசைகள். தூக்கமின்றி அசந்த கண்களின் முன் பளபளக்கிற கத்தி நுனிகள். பயத்தில் நனையும் வேட்டி. இப்படி ஒரு காட்சி. வரைமுறையின்றி பெருகின எண்ணங்கள். எதுவும் நடக்கக் கூடும் என்கிற பீதியை விதைத்திருந்தன.

இரண்டு நாள்களுக்கப்புறம் அழைப்பு வந்துவிட்டது. நாங்கள் பயந்ததை நினைத்து எங்களுக்கே வெட்கமாய் இருந்தது. மனசுக்குள் சிரித்துக் கொண்டோம். பங்கேற்கும் எட்டுமொழி வரிசையில் தமிழின் இருப்பை நான்கைந்து தரம் பார்த்துப் பார்த்து உறுதி செய்து கொண்டோம். அப்போதும் சின்ன சந்தேகம். விழாக்குழுவின் தொலைபேசி எண்ணைக் கண்டு பிடித்து தொடர்பு கொண்டோம். மறுமுனையில் மணியடித்துக் கொண்டேயிருந்தது. எடுக்க ஆள் இல்லை. மூன்று முயற்சிகள் தோல்வி. அப்புறம் கிடைத்தார். தன் கரகரத்த குரலால் எங்கள் பயத்தைக் கரைத்து விட்டார். விழா உண்டென்றும், தமிழுக்குக் கட்டாயம் இடம் உண்டு என்றும் திரும்பத் திரும்ப நம்பிக்கையூட்டினார். எங்கள் நன்றி வார்த்தைகளைப் பரவசத்தோடு தொலைபேசியில் பொழிந்தோம். அதற்கப்புறம் ஒருவரை ஒருவர் பார்க்க நேரும்போது கண்களின் நுனிகளில் தெறித்துவிடுகிற மாதிரி இருந்த நாணத்தை மறைக்க இயலவில்லை. எல்லாவற்றையும் மறந்துவிட்டு பயிற்சி செய்தோம். நாடக வசனங்களை மீண்டும் மீண்டும் பழகினோம்.

வழக்கம்போல் இந்த வருஷமும் பரிசைத் தட்டி வர வேண்டும் என்கிற உற்சாகம் நரம்புகளில் முறுக்கேறியது. நாடகத்துக்கான பரிசுகள் தவிர, நடிப்பு, இயக்கம், ஒலி, ஒப்பனை என்று சின்னச் சின்ன பரிசுகளும், கோப்பைகளும், கேடயங்களும் எங்கள் மன்றத்தின் கண்ணாடி அறையில் மின்னிக்கொண்டிருந்தன. முடிந்த மட்டும் வெற்றிக் கோப்பைகளை அள்ளி வரும் வேகம் எங்களைப் பம்பரமாய் இயக்கியது. அன்று எல்லோரும் கூடி இருந்தோம். கடைசி முறையாய் நாடகத்தின் முழு நாடகத்தையும் நடித்துப் பார்த்தோம். திருப்தியாய் இருந்தது. இன்னும் ஒரே ஒரு தரம் விழா மேடையில் பழகிக் கொண்டால் போதும்.

முழுநாடகமும் நாக்கு நுனியில் என்றாகிவிட்ட பிறகு தூக்கம் குறைந்துவிட்டது. கணத்துக்குக் கணம் ஒரு வேதனை பரவி நிம்மதியைப் பறித்தது.வெளிப்பட்டு முடிகிற தருணத்தை எதிர்நோக்கிய வலி அது. அந்த வலியின் சுகத்தோடேயே அலைவதும் பேசுவதும் மனசுக்குப் பிடிக்காமலில்லை.

விழா மண்டபத்தைச் சுற்றி நிறைய கூட்டமிருந்தது. தோரணங்களோடும், விளக்குகளோடும் முன்னும், பின்னுமாய் அந்த மண்டபத்தின் அமைப்பையே மாற்றிக் கொண்டிருந்தார்கள். அதிகாரிகளின் முகங்களில் பதட்டக்குறிகள். வந்து நிற்கிற வாகனங்களில் இருந்து பிறதுறை அதிகாரிகள் இறங்கி நோட்டம் பார்த்தனர். 'அது அப்படி இது இப்படி' என கைச்சைகைகள் மூலமாகவே உத்தரவுகள். பிற அதிகாரிகளின் தலையசைவுகளும், வணக்கங்களும். எல்லாம் தொடக்க விழாவுக்கு முதல்வரின் வருகையையொட்டி நடந்த முன் ஏற்பாடுகள் என்பது தாமதமாய்உறைத்தது. வாசலை ஒட்டியே நிறுத்தப்பட்டுவிட்டேன் நான். அறிமுகமான எந்த முகமாவது தென்படாதா என நடமாடிடும் முகங்களை கவனித்தபடி இருந்தேன்.

சற்று தூரத்தில் என்னைப் பார்த்து 'என்ன விஷயம்' என்பது போல சைகை செய்தார் ஒருவர். என் பதில் செய்கை புரியவில்லை அவர்களுக்கு. மீண்டும் 'என்ன விஷயம்' என்றார். பரிதாபமான முகத்துடன் நான் வாசல் சேவகனைப் பார்த்தேன். எந்த உணர்ச்சியையும் காட்டாமல் இரும்புப் பொம்மை போல இருந்தான் அவன். அவனை மீறி ஒரே ஒரு அடி உள்ளெடுத்து வைக்கிற பட்சத்தில் என்னைத் தூக்கி வெளியே வீசவும் தயங்காதவன் போல் உறுதியாய் நின்றிருந்தான்.

"சார் ஒங்களப் பார்க்கணும்"

கைகளை வாய் அருகில் குவித்து ஆங்கிலத்தில் சத்தமிட்டேன். ஒரே ஒரு வினாடி. அவரைச்சுற்றி நின்ற எல்லாரும் விறைத்தபடி நின்று என்னை உற்று நோக்கினர். அருகில் நின்ற சேவகனின் முகம் சிவந்ததைப் பார்த்தேன். மறுவினாடி அந்த அதிகாரியே வேகமாய் வாசல் பக்கம் வந்தார்.

"என்னப்பா... என்ன வேணும்.. எதுக்காகச் சத்தம் போடற.."

ஆங்கிலத்திலேயே இறைந்தார் அவர். ஒவ்வொரு வார்த்தையிலும் அழுத்தமும் கோபமும் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

"ஒங்களத்தா சார் பாக்க வந்தன்.."

"அதான் என்ன விஷயம்ன்னு கேட்டன்ல்ல. அங்கேர்ந்து சொல்ல வேண்டியதுதான. எதுக்காக கத்தனும். ஏற்கனவே ஏகப்பட்ட டென்ஷன். எல்லாம் ஒங்க ஆளுங்களால. சி.எம். கலந்துக்கறதால இன்னும் கொஞ்சம் கெடுபிடி. எதுவும் எக்குத்தப்பா நடந்து

படிப்பகம்

www.padippakam.com



டக் கூடாதேன்னு நாங்களே வயித்துல நெருப்பக்கட்டிட்டு திரியறம். இதுல நீங்க வேற கத்தனா எவனோ குண்டுதா போட வந்துட்டான்னு ஒரு செக்கண்ட்ல கொலயே நடுங்கிப்போச்சு...''

''அப்டிலாம் இல்ல சார்''.

சரி சொல்லுங்க. என்ன விஷயம்.''

''ஸ்டேஜ் ரிகர்சல்தா பாக்கி. மத்தபடி எல்லாம் ரெடி. போன வருஷம் மாதிரி ஒரு டைம் கொடுத்திங்கன்னா, ஸ்டேஜ்ல யும் ரிகர்சல் செய்துர்லாம். இன்னம் ரெண்டு நாள் தான இருக்கு. அதான் கேக்க லாம்ன்னு வந்தன்..''

''நோ...நோ...எந்த ரிகர்ச லும் விழா ஆரம்பிக்கறதுக்கு முன்னால கெடையாது.ரொம்ப ஸ்டிரிக்டான ஆர்டர். எங்க ஆளுங்களயே உள்ள உடல. வேணும்ன்னா ஒரு காரியம் செய்ங்க, ஓங்க நாடகம் எப்ப...''

''இருபத்தெட்டாம் தேதி ஆறாவது நாள் சார்''

''சரி. ராத்திரிதான நாடகம். அன்னிக்கு காலைல ரிகர்சல் வச்சிக்குங்க .. எல்லார்க்கும் அப்படித்தா செய்யலாம்ன்னு இருக்கம்''.

ரொம்ப யோசிக்க நேர மில்லை. அதிகாரி என் முகத் தையே பார்த்தபடி இருந்தார். இன்னொரு அதிகாரி அழைப் தாய் ஒரு சேவகன் ஓடிவந்து அவரருகில் பணிவோடு சொன் னான். அவர் பார்வை ஒரு கேள்விக் குறியாய் என் முன் னால் நின்றது. நான் அவசர மாய் 'சரி' என்றேன். தலை யசைத்தபடி நடந்து விட்டார் அவர்.

நண்பர்களிடம் நடந்ததை யெல்லாம் விவரித்தேன். அவர் கள் நம்ப மறுத்தார்கள். கடைசி நேரத்தில் காலை வாரி விடக்கூடுமோ என்ற சந் தேகம் உறுத்தியது.

விழா அன்று சாயங்காலம் உள்ளே போய்விட்டோம். ஏகப்பட்ட பாதுகாப்பு நட வடிக்கைகள். எங்கும் திட்டுத் திட்டாய்க் கூட்டம். மெல்லிய குரலில் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தார்கள். எந்தக் கும்பலாவது எங்கள் முகங் களை ஒன்றுக்கு இரண்டுதரம் பார்க்க நேர்ந்தால் தர்மசங்கட மாய் இருந்தது. ஒரு பெரிய அதிகாரி வந்து எல்லாரையும் அரங்குக்குள் போக உத்தர விட்ட பிறகு தான் மூச்சு வந்தது. முதல்வர் வந்து சேரும் முன்பு நாங்கள் உள்ளே நுழைந்து விட்டோம்.

சம்பிரதாயமான ஆரம்ப நிகழ்ச்சிகளுக்குப்பிறகு ஒரு தெலுங்கு நாடகம். நல்ல கதை. ஒலியமைப்புதான் மகா மோசம். இருள் தேவையான இடத்தில் வெளிச்சமாகவும், வெளிச்சம் தேவையான இடத் தில் இருளுமாய் விளக்கு களைச் சுழற்றிக் கொண்டிருந் தார்கள். நடுநடுவில் சிகப்பு ஒளியில் பாத்திரத்தின் முகங் கள் அம்மன் கோயில் சிலை கள் போல ஜொலித்தன. தின மும் ஒவ்வொரு மொழியாய் அரங்கேறிக் கொண்டிருந்தது. விதம் விதமான உள்ளடக்கம். விதம் விதமான நடிப்பு. ஏனோ மனசைப் பறிகொடுக்க முடிய வில்லை. சதாகாலமும் ஒரு பதட்டம். கவலை, பயம்.

ஆறாம் நாள் காலை எங்கள் பயிற்சிக்காகத் தயாரானோம். புதிய செட்டிங்குகளைப் பொருத்த வேண்டுமே என்கிற அவசரம் வேறு. காட்சிகளை யும், பாத்திரம் நடமாடும் இடக் குறிப்புகளையும் விளக்கி னேன். முதல் காட்சி ஆனந்த னின் வசனத்தோடு ஆரம் பிக்கப்பட வேண்டும். ஓரமாய் நின்றபடி நான் சமிக்ஞை கொடுத்தேன். அவன் பேச ஆரம்பிக்கும் தருணம். பத்து பதினைந்து பேர்கள் மேடைக்கு ஓடி வந்தார்கள். அவர்கள் கேரளக்காரர்கள் என்றும், தம் நாடகத்தைப் பயிற்சி செய்ய அனுமதி பெற்றிருப்ப தாயும் சொன்னார்கள். நாங் களும் ஏற்கனவே பெற்றிருப் பதைச் சொன்னேன். ஒரே குழப்பம், விவாதம். சட்டென முகத்தில் பிரகாசத்துடன் அவன் அதிகாரி கையெழுத் திட்ட கடிதத்தைக் காட்டி னான். என்னிடம் இல்லை. வெறும் வாய்வார்த்தையாய் அனுமதித்தார் என்றேன். எனி னும் என்வாதம் எடுபட வில்லை. மேடையில் இருந்து இறங்கி விட்டோம். அவமானக் குறிகள் என் முகத்தில் கவிந் தன. கோபத்தில் பற்களைக் கடித்தேன். மண்டபத்தை யொட்டித்தான் அதிகாரியின் அறை இருந்தது. நேருக்கு நேராகவே விஷயத்தைப் பேசி விடுவது என்று நடந்தேன்.

வாசலில் இருந்த சேவகன் எங்களைத் தடுத்து விட்டான். கண்டிப்பாய்ப் பார்த்தே தீர வேண்டும் என்ற பிறகு ஒரு வரை மட்டும் அனுமதித்தான். ஏற்கனவே சந்தித்து அனுமதி பெற்றவன் என்பதால் என்னையே போகச் சொன் னான் ஆனந்தன்.

என்னைக் கண்டதும் சிரிக்க முயன்றார் அந்த அதிகாரி. நான் சிரிக்கவில்லை. என் முகத்தின் கடுமை மறையாமலே இருந்தது. "என்ன விஷயம்'' என்றார். நடந்ததைச் சொன் னேன். உட்காரச்சொல்லி நாற்காலியைக் காட்டினார். நான் மறுத்தேன். எழுந்து வந்து என் தோளை அழுத்தி உட்கார வைத்தார். அவர் மேசையில் சாய்வாக உட்கார்ந் தார். எனக்காகப் பரிதாபப் படுவது போலிருந்தது அவர் பார்வை.

''அதிகாரம்ன்னா என்னன்னு தெரியுமா?'' என்றார். திசை மாற்றும் பேச்சாகப்பட்டதால் எரிச்சலுக்கு உள்ளானேன்.

''ரேங்க் ஆஃப் டெசிக் னேஷன் எதுன்னு புரியுமா'' என்றார் மீண்டும். நான் எது வும் பேசவில்லை.

''ஒவ்வொரு டெசிக்னேஷ னுக்கும் கொஞ்சம் அதிகாரம் உண்டு. ஆனா ஒரு செகண்ட் ரேங்க் டெசிக்னேஷன் அதிகா ரம் இன்னொரு ஃபர்ஸ்ட் ரேங்க் டெசிக்னேஷனுக்குக் கட்டுப் பட்டது..."

மீண்டும் அவர் என்னைப் பார்த்தார். நான் எதுவும் பதில் சொல்லவில்லை.

''உங்க விஷயத்லயும் இது தான் நடந்தது. நீங்க ரிகர்சல் செய்யலாம்ன்னு என் அதிகா ரத்த வச்சி சொன்னன். எனக்கு மேல் அதிகாரி நீங்க செய்யக் கூடாது, அவுங்க செய்யட் டுன்னு சொன்னா என்னால என்ன செய்யமுடியும்''

விஷயம் மெல்லப் புரிந்தது எனக்கு. உறைய ஆரம்பித்த அவர் முகத்தைப் பார்த்து "சாய்ங்காலம் எங்க நாடகம். இப்ப கூட ரிகர்சல் செய்ய அனுமதி இல்லன்னா என்ன அர்த்தம் சார்'' என்றேன்.

அவர் தோளைக் குலுக்கி விட்டு என் முகத்தைப் பார்த் தார். "எல்லாம் சரிதான்'' என்பதுபோல் தலையை மேலும் கீழும் அசைத்துக் கொண்டார்.

"அந்த அதிகாரியப் பாத்து பேசமுடியுமா"

அதிகாரி என்முகத்தையே பார்த்தபடி இருக்க, நான் அவர் பதிலை எதிர்பார்த்தேன்.

"பாத்து..."

"எந்த விதத்துல இது ஞாயம்ன்னு கேக்கணும்."

''வாங்க என்னோட''

ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டே எழுந்தார் அவர். நான் தொடர்ந்தேன். ஏழெட்டு அறைகளைக் கடந்தோம். மண்டபத்தைச் சுற்றி எல்லாம் வட்டவடிவில் வடிவமைக்கப் பட்ட அறைகள். குறிப்பிட்ட அறைக்கு வந்ததும் என்னை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தார். பதட்டத் தின் உச்சியில் இருந்தேன் நான். ஒரு பாதுகாப்பற்ற உணர்வு என்னுள் விரிந்து அலைக்கழிந்தது. மனநிம்மதி சுத்தமாய்க் கெட்டுவிட்டதை உணர்ந்தேன்.

மீண்டும் வெளியே வந்தவர் என்னையும் உள்ளே அழைத் துப் போனார். பெரிய அதிகாரி யின் முகம் சிரிப்பில் மிதந்தபடி இருந்தது. காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தார். பக்கத்தில் இருந்த நாற்காலிகளில் எங் களை உட்காரச் சொன்னார்.

''நீங்க சொல்லுங்க'' என்று எதிரே அமர்ந்திருந்த இன் னொருவரைப் பார்த்துச் சொன் னார்.

அதிகாரியால் தூண்டப்பட்ட தும் மடைதிறந்தது போலப் பேசினார் அவர். வெள்ளை ஜிப்பா, தெற்கத்திய அமைப் பில் கட்டிய வேட்டி. தங்க பிரேமிட்ட கண்ணாடி. ஒவ் வொரு வார்த்தையைச் சொல் லும்போதும் அவர்முகம் பிரகா சத்தில் மின்னியது.

''...சுதந்திரம் நமது பிறப் புரிமைன்னு அந்தக் காலத்துல திலகர் சொன்னார். நமக்கும் சுதந்தரம் வேணும். நம்ம ஊர் நதிய நாம அனுபவிக்கற சுதந்தரம் வேணும். நம்ம நதி நம்ம பிறப்புரிமைன்னு சொன்னன், ஒரே கைதட்டல். இங்கேர்ந்து ஒரு சொட்டுத் தண்ணி கூட வெளியில போகக்கூடாது. அப்படிப் போவுதுன்னா, எங்க ரத்தத்தோட சேர்ந்துதா அது போவணும்ன்னு முடிச்சன். கைதட்டல் நிக்கவே இல்ல. அவ்வளவு பேரும் நான் சொன்னதையே மந்திரம் மாதிரி திருப்பித்திருப்பிச் சொல்றாங்க. கூட்டத்துல அந்தப் பேச்சுதா பெரிய பேச்சு...''

"ரொம்ப சந்தோஷம். ரொம்ப சரியா சொல்லி இருக்கறிங்க" என்றார் பெரிய அதிகாரி.

"முழுப்பேச்சும் பேப்பர்ல்ல வந்தாச்சே, பாக்கலியா ... பூரா பேச்சும் ரிப்போர்ட்டாகி

படிப்பகம்

www.padippakam.com



பெரிய எடத்துக்கு போயாச் சின்னு கேள்வி. அவுங்களுக்கும் ரொம்ப திருப்தியாம். எப்படியும் பட்ஜெட்டுக்கு முன்னால அமைச்சர் பதவி கெடைச்சிடும்ன்னு சொல்றாங்க.துணை அமைச்சராவோ ...அமைச்சராவோ ... ...ஏதோ ஒண்ணு ... "

"இல்ல இல்ல. கண்டிப்பா ஒங்களுக்கு அமைச்சரே கெடைக்கும்."

மேசையை ஆரவாரத்துடன் தட்டிச் சொன்னார் பெரிய அதிகாரி. சந்தோஷமும் நாணமும் படர உட்கார்ந்திருந்தார் எதிரிலிருந்தவர். கொஞ்ச நேரம் நிசப்தம்.

"பழைய தோஸ்த்தாச்சே நீங்க மறக்கமுடியுமா. கலாச்சார டிப்பார்ட்மென்ட்டே கெடைச்சாலும் கெடைக்கலாம். அப்பறம் ஒருவார்த்த கூட எங்கிட்ட சொல்லலியேன்னு பேச்சு வரக்கூடாதில்ல. அதான் வழில எறங்கி சொல்லலாம்ன்னு வந்தன்."

"ரொம்ப ரொம்ப சந்தோஷம்" என்றார் அதிகாரி. அப்போது தான் எங்கள் பக்கம் திரும்பியவர் "அட......ஒங்கள மறந்துட்டனே, என்ன விஷயம்" என்றார். சட்டென நான் பேச ஆரம்பித்து விட்டேன். மளமளவென்று என் குமுறல்களைக் கொட்டினேன்.

"அவுங்களும் கேக்கறாங்கப்பா. நான் என்ன செய்ய முடியும்."

முகத்தை ரொம்ப பவ்யமாய் வைத்துக்கொண்டு கேட்டார்.

"சாய்ங்காலம் எங்க நாடகம் சார். இப்பவும் ரிகர்சல் செய்யலன்னா எப்ப செஞ்சி எப்ப ஸ்டேஜ் செய்றது சார்."

என் குரலில் சட்டென்று கடுமை ஏறிவிட்டதை உணர்ந்தேன். என் கடுமையைக் கண்டு அதிகாரியின் முகம் சிவந்தது. காட்டிக்கொள்ளாததுபோல பேச முயற்சி செய்தார். "பொறுமை... பொறுமை" என்று கை உயர்த்தினார்.

"நெலைமை புரியாம ஆத்தரமா பேசறிங்க. எங்க சங்கடம் ஒங்களுக்கு என்ன தெரியும்."

"அப்பிடி என்ன நெலைமை"

"என்னவா...தமிழ் நாடகம் நடக்கக் கூடாதுன்னு தெனம் நூறு போன்கால். நூறு மிரட்டல். தெனம் பத்து மொட்டக் கடுதாசி. அதை எல்லாம் சொன்னா புரியுமா ஒங்களுக்கு"

"அதுக்காக..."

"ஒங்க ரிகர்சலோ ஒங்க நாடகமோ நடக்குதுன்னு தெரிஞ்சா மண்டபத்துக்கே நெருப்பு வச்சிருவம்ன்னு மெரட்டறாங்க. ஏதாச்சும் எக்குதப்பா ஆச்சின்னா நான்தா பொறுப்பாவணும். இந்த மாதிரி நெலைமைல நீங்களும் அனுசரிச்சிப் போவணும் ..."

நான் பதில் பேசவில்லை. அவரையே முறைத்தபடி உட்கார்ந்திருந்தேன்.

"அப்ப எங்க நாடகம்."

என் மனசில் சூடேறிக் கொண்டிருந்தது. கீழே தள்ளப் பட்டது போல உணர்ந்தேன்.

"இன்னிக்கு வேணாம். இன்னோர் நாள் வச்சிக்கலாம். இன்னம் ரெண்டு நாள் இருக்குது. அதுல என்னிக்காவது ஒருநாள் வச்சிடலாம். அதுல கூட ஒரு சின்னமாத்தம். வழக்கம் போல ராத்திரி ஆட்டமா வேணாம்.போட்டிங்கறதனால நடுவர்ங்க பாக்கறதுதா முக்கியம். நடுவர்ங்களுக்கு மட்டும் நடிச்சிக் காட்டனா போதும். காலைல ஆறு மணிக்கே ஆரம்பிச்சிட்டம்ன்னா எட்டு எட்டரைக்கெல்லாம் முடிஞ்சிடும். பிரச்சனையே இருக்காது எப்ப வச்சிக்கலாம் சொல்லுங்க..."

அவர் பேசப்பேச எனக்குக் கடுப்பேறியது. வேகமாய்த் தலையசைத்து மறுப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்ததில் அந்த அதிகாரியும் பதற்றமடைந்தது தெரிந்தது. உச்சமாக "இது பெரிய மோசடி" என்று சொன்னதும் அவர்க்குக் கோபமேறியது. மீண்டும் அழுத்தமான கண்டிப்புக் குரலுடன் சொன்னார்.

"ஊரே பதறிப்போய் இருக்குது. நெலமைய தெரிஞ்சி நீங்க ஒத்துழைக்கணும். ஒங்க ஒத்துழைப்பத்தா நாங்க எதிர் பார்க்கறம். அதான் எங்களுக்கும் நல்லது. ஒங்களுக்கும் நல்லது..."

என்னைப்பார்த்துப் பேசியவர் திடுமென எதிரிலிருந்தவரிடம் கைநீட்டி "நீங்க என்ன சார் சொல்றிங்க" என்றார். வாய்ப்பு கிடைத்த ஆனந்தத்தில் தொண்டையைச் செருமியபடி என்னைப் பார்த்து பேசத் தொடங்கி விட்டார் அவர்.

"ஏன் இப்பிடி நடந்துக்கறிங்க.கொஞ்சம் அனுசரிச்சிப் போவக் கூடாதா. ஒங்க ஆளுங்க எல்லாருமே இப்பிடித் தானா. எல்லாத்லயும் புடிவாதந்தானா. இந்த ஊர்ல வந்து வாழலாம்ன்னு நெனைக்கறிங்க. தொழில் செய்யணும்ன்னு நெனைக்கறிங்க. ஆனா நெருக்கடி சமயத்துல எங்களோட ஒத்துழைக்கணும்ன்னு ஏன் தோணல ஒங்களுக்கு ...?"

அவர் பேச்சு அளவுமீறி அலைந்தது, பிரச்சனையை வேறுபக்கம் இழுக்கிற தந்திரம் புரிந்தது. அவரை நிறுத்தும் வழி தெரியாமல் அதிகாரியைப் பார்த்து நானே பேச ஆரம்பித்தேன்.

"ஆடியன்ஸ் இல்லாம நடிக்கறதுல அர்த்தமிருக்காது சார்."

"இருக்கலாம். ஆனா இப்ப நான் சொன்னதுதா முடிவு. நடுவர்களுக்கு மட்டும் நடிச்சிக் காட்டனா போதும். சொல்லுங்க. நாளைக்கி காலைல வச்சிக்கலாமா ... மூணாம் பேருக்குத் தெரியாம ரகசியமா முடிச்சிர்லாம் ... "

"ஒங்க முடிவுல எனக்கு உடன்பாடு இல்ல" நான் சின்னக்குரலில் பேசினாலும் ஒவ்வொரு வார்த்தையிலும் மிதமிஞ்சி அழுத்தத்தை உபயோகித்தேன்.

"ரொம்ப புடிவாதமான ஆள் நீங்க" என்றார் பெரியமனிதர்.

"கடைசியா கேக்கறன். ரெண்டுல ஒன்னு முடிவு சொல்லுங்க..."

"முடியாது ... முடியாது ... " என்று எழுந்து நின்றேன். "ஆடியன்ஸ் நடுவுல நடந்தாத்தா அது கலை. ஒங்க முடிவு கலையையே அவமானப்படுத்தற விஷயம்.

அறையின் கண்ணாடிச் சன்னல்கள் சட்சட்டென உடைந்து சிதறின. அதிர்ச்சியில் ஒரு சேர அந்தப் பக்கம் திரும்பினோம். சரமாரியான கல்வீச்சில்கட்டடத்தைச் சுற்றி ஆள்கள் ஈடுபட்டிருந்ததைக் கண்டதும் பயத்தில் உறைந்தது மனம். ஒரு கணம் குழப்பம்.கலக்கம். அடிவயிறில் ஈரம் பரவியது. மறுகணம் வெளியே காக்க வைத்துவிட்ட நண்பர்களுடன் கலந்து கொள்ள ஓட ஆரம்பித்தேன்.

○ ○ ○

# போலியாய்...

இரத்தின. கரிகாலன்

மினுங்கும்
சிகரெட் வெளிச்சத்தில்
அரங்கேறிய அசிங்கங்கள்

குப்பைத் தொட்டியில்
கசங்கலான
அருவெறுப்பூட்டும் சிசுக்கள்

பக்கத்து தோட்டத்து
கத்தரிச் செடியின்
வளர்ச்சியையும் பொறுக்காத
விசால உள்மனம்

பார்வையைத் திரையில் விட்டு
குருட்டு விழியோடு
படுக்கையறை முகஸ்துதி

மதுவோடு குயில் மாமிசம்
ஆனால்
எப்போதும் இசைரசிப்பு

புறாவுக்கு ஜெலட்டின் ஊட்டி
களத்தில் பூக்கொய்தல்

தாய்க்கு ஒரு வாளி
தண்ணீர் இறைக்காமல்
ஊருக்காயுழைப்பு
'சுயம்' மறைத்து
கவிதை செய்வாய்

இருப்பினும் —
எல்லோரும் சொல்கிறோம்
'அழகு உன் கவிதை.'

●●

www.padippakam.com



# இதுதான் இன உணர்வு

எதிரிகள்
தமிழனை
நினைத்துக்கொண்டே இருக்கிறார்கள்
தமிழர்கள்
தமிழனை
மறந்துகொண்டே இருக்கிறார்கள்

**கவிஞர் காசி ஆனந்தன்**

தாய்மொழி காப்போம் என்பது 'மொழி வெறி.'

இனம் வாழப் பேரரடுவோம் என்பது 'குறுகிய மனப் பான்மை!'

தாய் மண்ணுக்காக உயிர்தருவோம் என்பது 'பிரி வினைப் புலம்பல்.'

—மொழியும் இனமும் நாடும் பற்றி 'பெரியமனிதர்கள்' மொழியும் கூற்றுக்கள்.

உலகம் முழுமைக்கும் மொழியும் இனமும் நாடும்தான் உயிர்மூச்சு என்பதை இவர்கள் உணரவில்லையா? அல்லது தெரிந்தே தமிழினத்துக்கு உலை வைக்கிறார்களா ?

இக்கொடியவர்களின் சூழ்ச்சிகள் இடித்துத் தகர்க்கப்பட வேண்டும்.

தங்கள் தாய்மொழி பிறமொழிக் கலப்பால் அழிவதை உலகில் எல்லோருமே போராடித் தடுத்திருக்கிறார்கள்.

தமிழறிஞர் மு. வ. மொழிக் கலப்புக்கு எதிரான தன் கருத்தை வைக்கிறார்.

'பிறமொழிச் சொற்கள் தம் மொழியில் புகுவதை ஒவ்வொரு மொழியினரும் ஒவ்வொரு காலத்தில் எதிர்த்து வந்திருக்கின்றனர். அதற்குக் காரணம் மிக மிக இன்றியமையாத பழகிய சொற்கள் மொழியில் இயல்பாக அமைவனவாகத் தோன்றுகின்றன. ஒட்டாமல் நிற்கும் பிறமொழிச் சொற்களின் தொகை மிகும்போது மொழியின் இயற்கைத் தன்மை கெடுவதாக உணரும் மக்கள் அவற்றை எதிர்க்கத் தலைப்படுகின்றனர். பிரெஞ்சு மொழிச்சொற்கள் ஜெர்மன் மொழியில் மிகுதியாகக் கலந்தபோது இவ்வாறு அடிக்கடி எதிர்ப்பு இருந்துவந்தது.

மொழிக் கலப்பை எதிர்த்தார்கள் ஜெர்மானியர்கள் என்கிறார் மு. வ.

○○

மனிதரைப் பற்றிச் சிந்தித்த மனிதர் லெனின். சின்ன வட்டங்களுக்குள் என்றும் சிறைப்படாத பறவை. ஆனால் உண்மைகளை ஒப்புக்கொள்ள மறுத்து அவர் என்றும் ஒதுங்கியதில்லை. 'பேசுவதற்கு ஏதோ ஒரு மொழி இருந்தால் சரி' என்று பேசுபவரல்ல லெனின். தாய்மொழி அவர் தசையோடு குருதியோடு—உயிரோடு கலந்திருந்தது.

லெனின் சொல்கிறார் :-

'நாம் உருசிய மொழியைக் கெடுக்கிறோம். தேவையின்றிப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். தேவையற்ற பிறமொழிச் சொற்கள் எனக்கு எரிச்சலூட்டுகின்றன. செய்தித்தாள்களில் எழுதுவோர் செய்யும் தவறுகள் என்னை உண்மையாகவே சினமடையச் செய்கின்றன. உருசிய மொழிச் சிதைப்பிற்கு எதிராகப் போர் தொடுக்க இது உரிய நேரம் அல்லவா ?'.

(Lenin on Language.
பக்கம் 253)

'உருசிய மொழிச் சிதைப்புக்கு எதிராகக் குரல் கொடுப்போம்' என்று கூறவில்லை. 'போர் தொடுப்போம்' என்கிறார் லெனின்.

○○

ராஜஸ்தானில் அவார் என்று ஒரு மொழி. அவார் மொழி பேசும் மக்கள் ஒரு தனித் தேசிய இனம். அந்த மண்ணில் வாழ்ந்தவன்தான் உலகம் போற்றும் கவிஞன் ரசூல் கம்சத்தோவ்.

ரசூல் கம்சத்தோவ் சொல்கிறான் :-

'எளிய மக்களாகிய எங்களின் மொழி வளமற்றது என்று பிறர் கூறினால் கூறட்டும். நான் கூறவிரும்பும் எதையும் என் தாய் மொழியிலேயே என்னால் வெளிப்படுத்தமுடியும். என் உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளியிட எனக்கு வேறு மொழி தேவையில்லை'

கம்சத்தோவ் ஒரு கவிதையில் பாடுகிறான் :-

"என் அவார் மொழி நாளை உதிருமெனில்
மரணம் என்னை இன்றே சூடிக்கொள்ளட்டும்"

இதே உணர்வுகளை ஒரு தமிழன் இன்று வெளியிட்டால் 'மொழி வெறியன்" என்று பட்டம் சூட்டுகிறார்கள் இங்கே.

மறைமலையடிகள்—பாவாணர்-பாரதிதாசன் போன்றோரின் வடமொழிக் கலப்பு மீதான எதிர்ப்புக் கருத்துக்களை 'ஒன்றும் தெரியாத தமிழ்ப் புலவர்களின் உளறல்" என்று மறைவில் எழும்முணுமுணுப்புக்கள் இன்றும்தான்ஓயவில்லை.

அதுமட்டமல்ல—

கதை—கட்டுரை—நாளேடுகள்—வார இதழ்கள்—திரைப்படம் அனைத்திலும் ஆங்கிலம் கலந்து தமிழ் கொல்லும் கொடிய புயலொன்று கண்ட இடமெல்லாம் இன்று ஓங்கிவீசக் காண்கிறோம்.

இன உணர்வையும் தமிழர் வாழ்வில் இருள் கவ்விக் கொண்டிருக்கிறது

மொழி உணர்வும் இன உணர்வுபோல் உலகம் முழுமையும் நிறைந்த ஒன்றே.

சோவியத் புரட்சி 1917இல் வெடித்தது. அதற்கு முன்பே சோவியத் புரட்சிக்கு பல இன மக்களின் ஒத்துழைப்பும் தேவை என்பதை உணர்ந்தார் லெனின். 'தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையும்—பிரிந்து செல்லும்உரிமையும் வழங்கப்படும்' என்று அவர் உறுதி தந்தார். புரட்சி வென்றது. தொழிலாளர்தம் வர்க்க உணர்வையும் மிஞ்சி இன உணர்வு நின்றதாலேயே அந்த வாக்குறுதி அன்று வழங்கப்பட்டது—பின்பு அது சட்டமாகியது. இன்று சோவியத் குடியரசு பிரிந்து பல நாடுகளாக—அரசுகளாக விளங்குவதைப் பார்க்கிறோம்.

வர்க்க உணர்வை மட்டுமல்ல—மத உணர்வையும் பல வரலாற்றுக் கட்டங்களில் தேசிய இன உணர்வு வென்று வாகை சூடி இருக்கிறது. மத அடிப்படையில் உருவான பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் பிரிந்தது, மத உணர்வை தேசிய இன உணர்வு வென்று தலை நிமிர்த்திய வரலாற்று நிகழ்வே.

ஈராக் மண்ணோடு ஒட்டினாற் போல் 'குர்திஸ்" மண். அங்கே குர்திஸ் தேசிய இனம். அவர்கள் தாய் மொழி குர்திஸ்.

ஈராக் மண்ணில் அரபு தேசிய இனம். அவர்கள் தாய் மொழி அரபு.

ஆனால்—

ஈராக்கும் குர்திஸ்தானும் இஸ்லாமிய நாடுகளே.

படிப்பகம்

www.padippakam.com



முகமது நபியின் தாய்மொழி அரபு என்பதால்-அல்லது தூய திருக்குர் ஆன் அரபு மொழியில் எழுதப்பட்டது என்பதால்—தங்கள் தாய் மொழியான குர்திஸ் மொழியை தூக்கி எறிந்துவிட்டு அரபு மொழியை ஏற்று பக்கத்தில் இருக்கும் ஒரே எல்லையில் ஈராக்கில் வாழும் அரபு இனத்தோடு அரபு இனமாக குர்திஸ்தான் இசுலாமியர்கள் தங்களை மாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களோ தூய திருக்குர் ஆன் எழுதப்பட்ட அரபு மொழியைவிட குர்திஸ் மொழி எங்களுக்கு உயிரானது' என்கிறார்கள். 'நாங்கள் குர்திஸ் இனமாகவே வாழ்வோம்' என்று தனிநாடு கேட்டுப் போராடி வருகிறார்கள், அரபு மண்ணுக்கு எதிராக.

ஜோர்ஜியாவில் ஒரு நிகழ்ச்சி. ஸ்டாலின் ஜோர்ஜிய இனத்தவன். குருச்சேவ் சோவியத் குடியரசின் தலைவராக இருந்தபோது ஸ்டாலின் சிலைகள் சோவியத் மண்ணில் எல்லா மாநிலங்களிலும் இடித்து விழுத்தப்பட்டன. ஆனால்-ஜோர்ஜியாவில் மட்டும் அவன் சிலைகளை எவருமே தொடவே இல்லை என்கிறார்கள்.

இதுதான் இன உணர்வு. இந்த இனஉணர்வு தமிழனுக்கு இருக்க வேண்டும் என்று சொன்னால் ஏனோ சிலர் முகங்கள் இருண்டு விடுகின்றன.

தாய்நாட்டுணர்வு கூட முற்று முழுதாகத் தகர்க்கப்படுகிறது.

தமிழீழத்திலாவது தங்களுக்கு ஒரு தனி அரசு அமையாதா என்று உலகெங்கும் ஏதிலிகளாய் அலையும் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்குக்கூட எத்தனை தடைகள்?

பல தேசிய இனங்கள் உலகில் மொழி அடிப்படையிலான தாய்நாட்டுணர்வில் மூழ்கி வரலாறு படைத்துள்ளன. தாய்நாட்டுணர்வினால் வரையப்பட்ட எழிலோவியம்தானே அயர்லாந்து விடுதலை?

இங்கிலாந்தைச் சேர்ந்த பெருங்கவிஞன் ரூபர்ட் புருக் போர்வீரனாகவும் இருந்தான். ஒரு பாடலில் அவன் சொல்கிறான்:

'போரில் சிலவேளை நான் எங்கோ ஒரு மாற்றார் மண்ணில் (பிரான்சிலோ உருசியாவிலோ) இறக்க நேரிடலாம். ஆனால் எந்த மண்ணில் நான் புதைக்கப்பட்டாலும்—'என்னைப் புதைத்த அந்த எட்டடி நிலம் இங்கிலாந்தாகவே இருக்கும்'.

பிறந்த மண்ணில் வாழ முடியாத நிலை பாலத்தீனர்களுக்கு. தாயகத்துக்கு வெளியில் வாழ்ந்தும் அவர்கள் உயிராகத் தங்கள் அன்னை மண்ணைப் போற்றுகிறார்கள். இங்கே — தாய் மண்ணிலேயே வாழும் தமிழர் நிலை என்ன? தமிழ் மண்ணை எத்தனை பேர் மறந்து போனார்கள்?

கொடிய மறதியே தமிழனைக் கொன்று தொலைத்து விடும்போல் தோன்றுகிறது.

தமிழர்கள் தங்கள் தாய்மொழி தமிழ் என்பதை மறந்து வாழ்ந்ததால்தான், பாரதிதாசன், 'இன்பத் தமிழ் மொழி எமது!' என்றும் 'தமிழே எங்கள் தாய்மொழியாகும்!' என்றும் பாடி தமிழனுக்கு தமிழ்தான் அவன் தாய்மொழி என்று நினைவுபடுத்த வேண்டி இருந்தது.

தமிழர்கள் தங்கள் இனம் தமிழினம் என்பதை மறந்து போனதால்தான் தமிழர் தலைவர் சி.பா. ஆதித்தனார் 'நாம் தமிழர்' என்று சொல்ல வேண்டி ஏற்பட்டது.

தமிழர்கள் தங்கள் நாட்டை மறந்து நின்றதால்தான் 'தமிழ்நாடு உங்கள் நாடு. அதைத் தமிழ்நாடு என்று அழைக்க மாட்டீர்களா?' என்று கேட்டு உண்ணா நோன்பிருந்து சங்கரலிங்கனார் சாகவேண்டியதாயிற்று.

எதிரிகள் தமிழனை நினைத்துக் கொண்டே இருக்கிறார்கள்-தமிழர்கள் தமிழனை மறந்து கொண்டே இருக்கிறாகள். எதிரிகளின் சூழ்ச்சியிலும் தமிழர்களின் மறதியிலும் அழிந்து கொண்டிருக்கிறது தமிழினம்.

●●

## அக்கினிப்புத்திரனுக்கு ஒரு மறுப்பு

**தமிழவன்**

ஐம்பதுகளின் இறுதியிலிருந்து ஒரு / இருபது ஆண்டு காலம் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை உடைத்தெறிந்தது சிறு பத்திரிகை இயக்கம். சிறு பத்திரிகை இயக்கம் எதையும் சிந்திப்பதை ஊக்கப்படுத்தியது. நமக்குப் பிடிக்காத சிந்தனையையும் ஊக்கப்படுத்தியது. அதுதான் சிந்தனை வளர சரியான வழி. எங்கு சிந்தனை இல்லையோ அங்குள்ள மக்கள் தங்களை அறியாமலிருக்கிறார்கள் என்று அர்த்தம். அந்த வகையில் தமிழ்ச் சரித்திரத்தில்—தமிழர் சரித்திரத்தில் ஏற்பட்ட முக்கியமான இயக்கம் சிறுபத்திரிகை இயக்கம்.

இந்த இயக்கத்தைப் பிராமணப்பத்திரிகை—சிந்தனை படைப்பு மாதிரிகளிலிருந்து எழுபதுகளில் பிராமணர்அல்லாத இளைஞர்களும் தொடங்கினார்கள்.எழுத்து, நடை, கசடதபற ஆகிய மூன்று பத்திரிகைகளும் பிராமணர்களின் பெருவாரி படைப்பு முயற்சிகள். இக்கட்டத்தில் புதுக்கவிதையை ஏற்காத கட்சிக் கொள்கையைக் கொண்ட தாமரைப்பத்திரிகை என்போன்றோரை அறிமுகப்படுத்தியது. இக்கட்டத்தில் பரிசுக்கதையோ கட்டுரையோ (எனக்கு ஞாபகமில்லை) எழுதி தாமரையில் அறிமுகமானவர் அக்னிப்புத்திரன். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். இவர் வானம்பாடி இதழில் இரண்டு ஆசிரியர்களில் ஒருவர். அக்காலத்திலிருந்தே என் ஆத்மீய நண்பர்.

எண்பதுகள் வரை சிறுபத்திரிகை இயக்கத்தோடு வந்தார். திராவிட பாரம்பரியத்தின் எழுத்துக்களை அவர்கள் வளரவிட்ட விசாரிப்புக்கு எதிர்ப்பான ஜனரஞ்சக மனோபாவனைகளை எதிர்த்தார். அதாவது எதிர்க்கும் கூட்டத்தோடு இருந்தார். ஆனால் அவரது சுய வாழ்க்கைப் பின்னணி வேறு. அவர் கோவையில் வசித்த ஒரு தி.மு.க. பிரமுகரின் மகன். பெரிய இடங்களின் சம்பந்தம் உள்ள பிரமுகர். எம்.ஏ. படித்தவுடன் பிரமுகர்கள் உதவியுடன் அரசுக் கல்லூரியில் வேலை பெற்றவர். பல தமிழ்நாட்டு பெரிய புள்ளிகளைப்போலவே இந்த அக்னிப்புத்திரன் ஒரு தெலுங்கர். இன்றும் கூட வீட்டில் இவர் தெலுங்கில்தான் பேசுகிறார். தனிப்பட்ட முறையில் நான் மதிக்கும் இனிய சுபாவம் கொண்ட குழந்தை இவர்.

இந்த அக்னிப்புத்திரன் 'அரங்கேற்றம்' என்ற இதழில் 'கன்னடத்தமிழராகவும்காலப்போக்கில்கன்னடராகவும் மாறித்தீர வேண்டிய தமிழர்களே இவ்வாறு கருத்துக் கூறி வருகின்றனர்என்று என்னைப்பற்றி எழுதியிருக்கிறார். நான் தி.மு.க பிரமுகர் பிள்ளை இல்லை என்பதாலும், என் தாய்மொழி தமிழ் என்பதாலும், தமிழ் நாட்டுக்குள் எவ்வளவோ முயன்றும் வேலை கிடைக்காமல் பிழைப்பு தேடி கர்நாடகத்துக்கு வந்தவன். தமிழனா, தெலுங்கனா என்பதை கடைசியில் இரத்தத்தை வைத்துத்தானே அடையாளம் கண்டுபிடிப்பது? அல்லது சாதியை வைத்தா? எப்படிப்பார்த்தாலும் நான் தமிழனேதான். வருங்காலத்திலும் எந்தக் காலத்திலும் கர்நாடகத்து கன்னடராக நான் மாற முடியாது. ஆந்திராவிலிருந்து ஓடிவந்த சந்ததி ஒருவர் இன்றும் தமிழ்நாட்டுக்குள் தெலுங்கு பேசிக்கொண்டே இருக்கும்போது கர்நாடகத்தில் வாழும் நான் தமிழ் பேசிக்கொண்டே ஏன் வாழ முடியாது?

அக்னிபுத்திரன் ஒரு தமிழ் எழுத்தாளரை ''மலையாளி'' என்று அழைத்தார். இன்று கர்நாடகத்தில் இருக்கும்என்னையும் என்னோடு இயங்கும் பிற தமிழ் எழுத்தாள நண்பர்களையும் கன்னடர் என்றஅர்த்தம் தொனிக்கும்படி மேற்கோள் குறியிட்டு 'தமிழர்கள்' என்கிறார்.

எழுபதுகளில் சிறு பத்திரிகைகளின் தத்துவத்தின் பக்கம்இருந்தவர்களோடு இருந்தவர் இவர். தொண்ணூறுகளில் தன் குடும்ப கருத்துருவமான தி.மு.க. கருத்துருவத்தை வந்தடைந்துள்ளார். நல்ல வளர்ச்சிதான். அதனால் கிடைக்கும் லாபங்களை அவர் அடையட்டும். அதற்காக தமிழிலக்கியத்தை இவர் காட்டிக்கொடுக்க முடியாது. அதன் மரபு உயர்வானது. தமிழ் தமிழ் என்று கத்திவிட்டால் தமிழன் என்று நம்பி விடுவார்கள் என்று ஊரை ஏமாற்றும் அக்னிபுத்திரன் நினைக்கிறார். கடந்த சில ஆண்டுகளாக நடந்த நாடகம் இனி நடக்காது. தமிழின் உயர் சிந்தனை மரபைக்காக்க தீவிர சர்ச்சைகள் நடக்க வேண்டும். சர்ச்சைகளை நடக்க விடாதபடி மலையாளி, கன்னடன் என்று முத்திரை குத்தும் வழக்கம் மேற்கொள்பவர்கள் தமிழுக்கு எதிரானவர்களே. ●

படிப்பகம்

www.padippakam.com



# தமிழால் முடியும்!

வழக்கறிஞர் கி. சிதம்பரன்

**●● உள்நாட்டு அஞ்சல் கடிதத்தில் உள்ள இந்தி எழுத்தை அழித்தது குறித்து ஒரு மடல்**

அன்பிற்குரிய நண்பா,

உனது குத்தலான கடிதம் கிடைத்தது. வெகுவாக ரசித்தேன். என் துணைவியார் என்னை கேலி செய்ய வலிமை மிகு ஆயுதம் கிடைத்ததென எண்ணி மகிழ்ந்தார். உனக்கே உரித்தான கேலிமொழியில் என்னைக் கிண்டல் செய்துள்ளாய். எனினும், நகைச்சுவைக்கு அப்பால் நாம் விவாதிக்க வேண்டியவை நிறையவே உள்ளன...

எது எப்படியிருப்பினும், உள்நாட்டு அஞ்சலின் மீது அச்சடிக்கப்படும் இந்தி எழுத்துக்களை நான் அடித்தெழுதுவதனால் விவாதம் ஒன்றிற்கு வித்திட முடிகிறதென்றால், அதையே முதற்கட்ட வெற்றியாகக் கருதுகிறேன். செவிப்பறையை கிழித்திடுமளவில் குறட்டை விடும் தமிழனின் அருவருப்பான உறக்கத்தை சற்றேனும் கலைத்திட எமது முயற்சிகள் பயன்பட்டால் அது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தரும்...

பொறுப்புணர்வு ஏதுமற்ற அலட்சியம் மற்றும் சுயநல கோணத்தில் லாபம் பெறாதவற்றைப் பற்றிய அக்கறையின்மை என இரண்டு எய்ட்ஸ் நோய் தமிழ்ச் சமுதாயத்தை நிர்மூலமாக்கியுள்ளது. இதில் சிறிய சலனமாவது ஏற்படுத்திட வேண்டும்; இரண்டாயிர மூவாயிர ஆண்டு குறட்டையொலி நிறுத்தப்படவேண்டும்; இதன் துவக்கமே விவாதம்.

இந்தியா என்பது ஒரே மொழி, ஒரே இன, ஒரே வரலாறு, ஒரே பண்பாடு கொண்ட நாடல்ல; பல்வேறு மொழி, இன, பண்பாடு, வரலாறு கொண்ட பல நாடுகளின் கட்டமைப்பே இந்தியா. எல்லா இனங்களும் மொழிகளும் இங்கே சரிசமமாக கருதப்படவேண்டும். எல்லோருக்கும் இங்கே சம உரிமையும், சமத்துவ நோக்கும், சம நுகர்வும் இருத்தல் இன்றியமையாதது. இந்நிலையில் இந்தி எனும் வட்டார மொழியை பிறரின் மீது அடாவடித்தனமாக, மூர்க்கத்தனமாக, நியாயமற்ற முறையில் திணிப்பதென்பது வடவரின் - குறிப்பாக இந்திமொழி வெறியரின்-ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதாகும். இந்தியா எனும் அரசியல் கற்பனை வரைபடம் பிரிட்டிஷ் அரசிற்கு வரிவசூல் செய்வதற்கு தேவையான ஒன்றாக இருந்தது. அதனைத் தொடர்ந்து, இன்று காங்கிரஸ்-பார்ப்பன - பனியா - பாரதீய ஜனதா கூட்டத்தினர் இவ்வமைப்பு மாறாமல் தொடர வெண்டுமென விரும்புகின்றனர். மக்கள் விரோத சக்திகளான இவர்கள் தங்களை இந்திய தேசிய பற்றாளர்களாக காட்டிக் கொள்கிறார்கள். மக்களை மிதித்து, மண்ணைப் போற்றும் புனித ஆத்மாக்கள் இவர்கள். நலிவடைந்து, வரலாற்றுப் பாதையில் பன்னெடுங்காலமாக துரோகத்தாலும், வஞ்சகத்தாலும் குழி தோண்டி புதைக்கப்பட்டு, இன்று பிற்பட்டோராகவும், ஆதிதிராவிடராகவும் அலைந்து திரியும் இவர்களுக்கு மண்டலறிக்கையின் பலன் கிட்டாதிருக்க மேற்கூறிய ஆதிக்க சக்திகள் ஒன்றுபடுவர். கயாவில் புத்தர் ஞானம் பெற்றதாக கூறப்படுமிடத்தை களவாடிய பார்ப்பனர்களே ராமன் பிறந்த இடத்தை கண்டுபிடித்து விட்டதாகவும், அங்கே ஒரு கோவில் இருந்ததை முஸ்லீம் அரசர்கள் இடித்து மசூதி கட்டிவிட்டதாகவும் கதைக்கிறார்கள்.

இராமாயணம்,மகாபாரதம் ஆகியவை வரலாற்று நூல்களல்ல புராணங்கள், கட்டுக்கதைகள் என்பதையும் மக்கள் புரிந்த பாடில்லை. கடவுள் பிறந்தானாம், அதாவது ஆதியும் அந்தமும் இல்லாத, முக்காலத்தையும் உணர்ந்த, உலகிலுள்ள அனைத்தையும் படைத்து இயக்குவிக்கும் பரம்பொருள் லட்சக்கணக்கான வருடத்திற்குமுன் பிறந்ததுவாம். அந்த இடத்தை இன்று இந்த புத்திசாலிகள் கண்டுபிடித்து விட்டனராம். இதற்கு "அகில இந்தியா" தேவைப்படுகிறது. செங்கல் சேர்க்க "அகில இந்தியா" தேவைப்படுகிறது. பூஜை செய்வதற்கு "அகில இந்தியா" தேவைப்படுகிறது. செருப்பு ஊர்வலத்திற்கு "அகில இந்தியா" தேவைப்படுகிறது. பாரதீய ஜனதாவை பூச்சாண்டியாக காட்டி தங்கள் ஆதிக்கத்தை தொடரச் செய்ய முயற்சிக்கும் காங்கிரசிற்கு - நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித் தந்ததாக கூறி ஓட்டுப் பொறுக்கும் காங்கிரசிற்கு - எலிக்கு தோழன்-பூனைக்கு நண்பன் என கொள்ளை அடிப்பவனின் கூட்டாளியாக இருந்து கொண்டே சோசலிசம் பேசும் காங்கிரசுக்கு-மதஇன கலவரங்களை காட்டி தான் ஒரு பொது மனிதன் என ஏமாற்றிக் கொண்டிருக்கும் காங்கிரசுக்கு-

"அகில இந்தியா" தேவை. ஓட்டு மொத்தமாய் வியாபாரச் சந்தைக்கும், சுரண்டல் முறைக்கும் இலகுவாக இருக்க "அகில இந்தியா" பனியா கூட்டத்திற்கும் தேவை. எல்லா அதிகாரங்களையும் அபகரித்து, மக்கள் விரோத நடவடிக்கைகளில் சட்டப் பாதுகாப்புடன், பத்திரிகை பலத்துடன் துரோகிகளுடன் இணைந்து செயல்படும் பார்ப்பனிய கூட்டத்திற்கு "அகில இந்தியா" தேவை.

ஆமாம், காலம் காலமாய் அடிமைப்படுத்தப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, பிரித்தாளப்பட்டு, ஒருவர் மீது மற்றவர் ஆதிக்கமும், சுரண்டலும் செய்யும் இழிநிலைக்குள்ளாக்கப்பட்டு, நித்தமும் உழைத்து வினாடி தோறும் ஏமாற்றப்படும் நமக்கெதற்கு இந்த புரடா?

நம்மை மதிக்காத,
நமது தாயை மதிக்காத,
நமது வரலாறை மதிக்காத,
நம்மை மனிதர்களாக அங்கீகரிக்காத 'இந்து' மதம் எதற்கு?
"இந்திய" தேசம் எதற்கு?

இந்திமொழியை நேரடியாகவும் மறைமுகமாகவும் மோசடியாகவும் திணித்து, தமிழர்களை இரண்டாம்தர குடிமக்களாக்கும் முயற்சிகளை எதிர்ப்பதில் நாம் கவனமுடன் இருக்கவேண்டும் என்பது தவறா?

நமது விருப்பத்திற்கு மாறாக, நமது அனுமதியின்றி, நம்மை கலந்தாலோசிக்காமல், நமது உரிமைகளை மதிக்காமல், நமது மொழி-இன-பண்பாட்டு மதிப்பீடுகளை கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் நம் மீது

**அடிமைப்படுத்தும் சக்திகளுக்கு கூட்டிக்கொடுத்தும், காட்டிக்கொடுத்தும் தன்னை வளர்த்துக் கொள்ளும் சமூக விரோதிகள் நமது தலைவர்களாக ஆக முடியுமா?**

**சினிமாக்காரனுக்கு கட்அவுட்டும் சினிமாக்காரிக்கு கவிதைப்போட்டியும் இவர்களையே அரசியல் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளவும் தமிழினம் சம்மதிக்குமா?**

படிப்பகம்

www.padippakam.com



# காக்கைப் பாட்டு

கூட்டுக்கவிதை

எம். டி. முத்துகுமாரசாமி
விக்ரமாதித்யன்



காகமே எங்கே போனாய் நீ
எங்கேயும் போகவில்லை காகம்
எங்கே போனாலும்
கூடு திரும்பிவிடும் அந்திக்கு

காகமே எங்கே போனாய் நீ
பொன்மாலைப் பொழுதுகளை இழந்து
போகப் போகிறாயா நீ
இழந்ததெல்லாம் எனறென்றும்
இழப்புத்தான் காகமே
இழக்காதே எதையுமே (நீ)

காகமே எங்கே போனாய் நீ
துணை தேடிப்போனாயா (நீ)
துணை தேடி அவ்வளவு
தூரம் போயிருக்க முடியாது
எங்கே போனாய் நீ
எல்லோரும் கலக்கமுறும்படி

காகமே எங்கே போனாய் நீ
காகத்துக்குத் தெரியும்
காகத்தைப் பற்றிக் கவலைப்படுகிறவனுக்குத் தெரியாது
காகத்தைப் பற்றிக் கவலைப்படுபவன் கள்ளன்

காகமே எங்கே போனாய் நீ
காகம் உன்ளூர் தாண்டிப் போகாது
காகத்துக்கு என்ன கவிதை
காகம்போல வாழக் கற்றுக்கொள் முதலில்

காகமே எங்கே போனாய் நீ
குறுக்குத் துறைப் படிகட்டுகளில்
கொட்டிக் கிடக்கிற பருக்கைகளை
கொத்தித் திங்கப்போனேன் போ
சங்கிலி பூதத்தானுக்குப் போட்ட படையல்
மிச்சமிருக்கு எனக்கு போ
புட்டார்த்தியம்மன் சந்நிதிக்கு வெளியில்
பிரசாத இலைகள் குவிந்து கிடக்கு போ

என்று சொல்வாயோ
திருநெல்வேலி மண்விட்டுப் போக
பிரியப்படாத காகம் நான்
மருத மரநிழலில் குடியிருக்கும் காகம் நான்
லெவல்கிராஸிங் எசக்கியம்மன்தான் என் தெய்வம்
போடாபோ போக்கத்தவனே போ

எனக்
கூவும்
காகமே எங்கே போனாய் நீ
கேட்டதையே கேட்டுச் சலிப்பூட்டாதே
கேள்விமேல் கேட்டு அயர்வூட்டாதே
கேட்பது சுலபம் கிழவிபோல
கிளைக்கேள்வி வேர்க் கேள்வியென்று
கேட்டு நீ இம்சிக்காதே
குஞ்சுமுகம் தேடுது கூட்டுக்குப் போக நேரமாகுது
கொண்ட ஜோடி நினைவு வாட்டுது
கோபித்துக் கொள்ளாதே மனிதா
போய் வருகிறேன் நான்

---

திணிக்கப்படும் இந்தியை எதிர்த்தாக வேண்டிய சமூக-வரலாற்று — பொருளாதார-அரசியல்-பண்பாட்டுக் கடமை நமக்குண்டு என்பதை சுட்டிக் காட்டும் எளிய முயற்சிதான் இந்தி எழுத்துக்களை அடிப்பதென்பது. ஒரு தனி மனிதனின் கிறுக்குத்தனமாக தோன்றலாம்—ஆனால் தமிழர்கள் அனைவரும் - சுயமரியாதையுடையவர்களாகவும், தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும். சுய சிந்தனையாளர்களாகவும், இன-மொழி உரிமையை உணர்ந்தவர்களாகவும், சமூகவியல் வரலாறு அறிந்தவர்களாகவும், விடுதலையுணர்வு பெற்றவர்களாகவும் —மொத்தத்தில் மனிதர்களாக இருந்தால்...

சற்றே கற்பனை செய்து பார்... இப்போதிருப்பதுபோல் எவனெவனோ தமிழன் முதுகில் சவாரி செய்ய முடியுமா? அடிமைப்படுத்தும் சக்திகளுக்கு கூட்டிக்கொடுத்தும், காட்டிக்கொடுத்தும் தன்னை வளர்த்துக் கொள்ளும் சமூக விரோதிகள் நமது தலைவர்களாக ஆக முடியுமா?

சினிமாக்காரனுக்கு கட்அவுட்டும் சினிமாக்காரிக்கு கவிதைப் போட்டியும் - இவர்களையே அரசியல் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளவும் தமிழினம் சம்மதிக்குமா?

அழும் குழந்தை அம்மணத்துடன் பட்டினியால் வாட... நித்தமும் குடமுழுக்கும், கும்பாபிஷேகமும். மங்கள நீரோட்டமும், பாலாபிஷேகமும், கிரகப்பிரவேசங்களும் நடைபெறுமா?

தன்மானமும், சிந்தனையும், சுதந்திர வேட்கையும், ஒற்றுமையுணர்வும் நாம் பெறுவது எப்போது? இப்போது சொல்-

பல்வேறு மொழி, பல்வேறு இன-பல்வேறு பண்பாடு - பல தரப்பட்ட வரலாறு என, பல்வேறு மக்கள் ஒருசில பொது நன்மைகள் கருதி ஒன்றாய் இருக்கும் கூட்டமைப்பு போல் இல்லாமல்,

அனைத்துமே டில்லி பாபுக்களால் முடிவு செய்யப்பட்டு-பிறர்மீது ஈவிரக்கமின்றி திணிக்கும் முயற்சிகளில் ஒன்றான இந்தியை தமிழர் மீது திணிப்பதை எதிர்த்து—அஞ்சல்துறையிலிருக்கும் இந்தி எழுத்துக்களை நான் என் பேனாவால் அடித்து திருத்துவது குற்றமா சொல் ...

●●

தூங்கும் புலியைப் பறைகொண் டெழுப்பினோம்
தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்பினோம்
தீங்குறு பகைவரை இவணின்று நீக்குவோம்
செந்தமிழ் உணர்ச்சி வேல்கொண்டு தாக்குவோம்.

—புரட்சிக் கவிஞர்

படிப்பகம்

www.padippakam.com





டெரக் வால்காட். 1992 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு பெற்ற கரிபியக் கவிஞர்.

வின்ட் வார்ட் தீவினில் 23 ஆம் தேதி சனவரி 1930 ஆம் ஆண்டு பிறந்தவர். மேற்கு இந்திய தீவின் கரிபிய கவிஞரும் நாடகாசிரியருமான இவர் ட்ரினிடாட்டில் அதிக காலம் தன் வாழ்நாளைக் கழித்தவர். அந்த நிலம்தான் இவருடைய எழுத்துக்களில் கரிபிய சரித்திரப் பூர்வாங்கம் மற்றும் அதன் நிலப்பரப்பைத் தேட வழிகோலியது.

இவரது கவிதைகளின் முக்கிய அம்சம் சர்வதேசத் தன்மை கொஞ்சமும் இன்றி, தன் பிரதேசத் தன்மையையும் அதன் நிலப்பரப்பையும், எழுத்தின் ஆழமான உட்கிடையாகக் கொண்டு இயங்குவதே. இவரின் நாடகங்கள் கிரியோலின் நாட்டுப்புற இலக்கிய வகையை அடித்தளமாக கொண்டவை.

வால்காட்டின் எழுத்துப் பரப்பானது, கரிபிய ஆன்மாவை அதன் நிலப்பரப்பினை எழுத்துள் வியாபகமாகக் கொண்டுள்ளது.

# பாய்மரக்கலத்தின் ஓட்டம்

தமிழில் : எஸ். சண்முகம்

இந்த ஆகஸ்ட்மாதம் சும்மாயிருக்க கடல் மென்மையாய் இருக்கும்
பிரெளன் தீவின் இலைகள் கரிபியாவின் கரையோரங்களில் ஒட்டிக்
கொண்டிருக்கும்
நான் வெளிச்சத்தை மரியா படித்துறையின் கனவுகளற்ற முகத்தின் மீது
ஊதுவேன் ஒரு கடல் பிரயாணி பாய்மரக்கலத்தில் மிதந்து செல்ல.
வெளியே உள்ள முற்றம் சாம்பல் நிறமாய் மாறுகிறது அதிகாலையினால்
நான் கல்லைப்போல் சமைந்திருக்க எதுவுமே அசையாதிருக்கும்.
குளிர்ந்த கடலோர சிற்றலை ஒலி மின்குத்தலாக இயங்கும்
ஆணியின் துவாரங்களாய் நட்சத்திரங்கள் ஆகாய கூரையிலிருக்கும்
காற்று மரத்தை இடையீடு செய்யும்
நான் என்னையே கடந்து போகும்போது எனது பக்கத்து வீட்டுக்காரி
தனது வீட்டின் முன்முற்றத்தை கூட்டிக் கொண்டிருந்தாள்
நான் கீழ்நோக்கி இறங்கியபடியே சொன்னேன்
மென்மையாக கூட்டு சூனியக்காரியே.
ஏனெனில் அவள் தூங்குவதே இல்லை.
ஆனால் அந்த 'நாய்' என்னை ஒரு பிணத்தைப் பார்ப்பதைப்
— போல் கூர்ந்து பார்த்தாள்.

அந்த வழியே சென்ற டாக்சியை நான் இழுக்க
விளக்குகள் எரிந்தபடியே இருந்தன
என் மூட்டைகளையும் பையையும் டாக்சி ஓட்டுனர்
ஒரு முறைப்போடு உள்ளே ஏற்றிக் கொண்டான்.
இந்நேரம் சாபைன் உன்னைப்போலவே உண்மையாய் போய்விட்டது
நான் அந்தக் கழுதைக்கு பதிலளிக்காது பின் இருக்கையில்
அமர்ந்து வானம் எரிவதைப் பார்த்தேன்
மேலே லாவன்டைன் பிங்க் ஒரு மேலாடையாக,
பின்னால் நான் விட்டுவிட்டு வந்த அந்தப் பெண் உறங்குகிறாள்.
நான் திரும்பிப் பார்க்க ஏறக்குறைய என்னைப்போலவே
ஒருவன்
அந்த வீடுகளுக்காக, அந்த வீதிகளுக்காக, அந்தப்
பாழாய்ப்போன தீவுக்காக அழுது கொண்டிருந்தான்.
கர்த்தரே ரைட்ஸன் சாலையில் அழுகிக்கொண்டிருக்கும்
நாயின்மீதும், உறங்கும் பொருள்களின் மீதும் கருணை வையுங்கள்
நான்கூட அந்தச் சாலைகளில் நாயாக இருந்திருக்கிறேன்
இந்தத் தீவுகளை நேசிப்பதுதான் என் சுமையாக இருக்கிறது
சீரழிவுகளிலிருந்து என் ஆன்மா சிறகடிக்கிறது
ஆனால்
என் ஆன்மாவை அவர்கள் விஷப்படுத்தத் துவங்கிவிட்டனர்
தங்களின் பெரிய வீடுகளாலும், பெரிய கார்களாலும்
கூலி, நீக்ரோ, சிரியன், பிரெஞ்சு கிரியோல்,
ஆகியவற்றை அவர்களுடைய விழாவிற்கு விட்டுவிட்டு
கடலில் குளிக்கிறேன் சாலைகளில் கடைசிவரை நடக்கிறேன்
மோனாஸ்டும், நாசாவும் இந்தத் தீவுகளையும் நன்றாகத் தெரியும்
அதோடன்றி துருப்பிடித்த தலையோடும்,
கடல்பச்சை கண்ணோடும் உள்ள மாலுமிகளையும் தெரியும்

அவனை எல்லோரும் சாபைன் என்று கிண்டலாக
கூப்பிடுவார்கள். நான், சாபைன் இருவருமே
சேரிகள் சொர்க்கமாக இருந்தபோது பார்த்திருக்கிறோம்.
கடலை நேசிக்கக்கூடிய நான் சாதாரண சிவப்பு நீக்ரோ
திடமான காலனிய கல்வி எனக்கு உண்டு
எனக்கு டச் இனத்தவரைத் தெரியும், நீக்ரோவைத் தெரியும்
ஆங்கிலம் என்னுள் கலந்திருக்கிறது
நான் 'யாருமே' அல்ல, நான் ஒரு தேசத்துவனும் அல்ல

ஆனால் மரியா படித்துறைதான் என் எல்லாச்
சிந்தனையும்
அங்கிருந்துதான் கடல் மேலும் கீழும் எழுந்து விழுவதைப் பார்த்தேன்
பாய்மரக்கலமும், படகுகளும் சூரியனால் புதிதாக
வர்ணமிடப்பட்டுள்ளன சூரியனின் ஒவ்வொரு பிரதிபலிப்பிலும்
அவளது கையெழுத்து பதிந்துள்ளது
எனக்குத் தெரியும் கறுப்பான கூந்தலை உடைய மாலை
தனது பிரகாசமான பட்டாடையை அந்தியில் உடுத்திக் கொள்ள
நட்சத்திர சிரிப்பு தன் பரப்பின் அடியில் கடலை மடித்திட
ஓய்வென்பதும் இருக்காது மறத்தல் என்பதும் இருக்காது

மயானத்தைச் சூழ்ந்துள்ளவர்களிடம் புத்துயிர்ப்பைப் பற்றி
பேசுவது போல்தான் இதுவும்
அவர்களுக்கு இறந்து போனவையெல்லாம்
மறுபடி உயிருடன் தேவைப்படுகிறது
ஆகையால் நான் சிரித்துக் கொள்கிறேன்
வில்லின் நாணிலிருந்து விடுபட்டது கடலை நோக்கிப் பாய்கிறது
இனியும் கடலில் நிறைய மீன்கள் உள்ளன என்று
சொல்வதில் எந்தப் பயனுமில்லை
அவள் காமமற்ற செராப்[1] ஒளியை அணிந்து கொள்வதில்
எனக்கு விருப்பமில்லை
எனக்கு அந்த வட்டமான காக்கிக் கண்கள் தேவை
ஒரு மர்மோ செட்டைப்[2] போல்
பின்னுக்கு சாய்ந்து கொண்டு சிரிக்கும் நாள்வரை
எந்த நகம் என் முதுகை வியர்த்தபோது உறுத்தியதோ
அதேபோல்
ஞாயிற்றுக் கிழமை மதியங்களில்
ஈரமான மணற்பரப்பின்மீது நண்டைப்போல்
நான் வேல் செய்து கொண்டே பார்த்தபோது
சிதைந்த அலைகள் வந்தன
அது கடலைப் பட்டாகக் கத்தரிக்கும் வில்லை தாண்டியது
உங்கள் எல்லோருக்கும் இதை
நான் என் தாய்ப்பாலின் மீது சத்தியமிட்டுச் சொல்லுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



இன்றைய அனல் அடுப்பிலிருந்து பறந்து செல்லும்
நட்சத்திரங்களையும்
என் குழந்தைகளையும் என் மனைவியையும், என் வீட்டையும்
நான் நேசிக்கிறேன்.
நான் இவை யாவையுமே
கவிஞன் கவிதையை நேசிப்பதைப்போல் நேசிக்கிறேன்
அதுவே மாலுமியை கடல் மூழ்கடித்துக் கொல்லுவதைப் போல்
கொல்லுகிறது.

நீ எப்போதாவது தனிமைப்பட்ட கடற்கரையிலிருந்து
பாய்மரக்கலத்தைப் பார்த்திருக்கிறாயா? சரி
நான் இந்த கவிதையை எழுதும்போது
அதன் ஒவ்வொரு சொல்லும் உப்பில் ஊறுகிறது
நான் ஒவ்வொரு முடிச்சையும் கோட்டையும் கயிறுகளாக
நீட்டி இழுப்பேன் இந்த பாய்மரக்கலத்தின் கயிறாக
சாதாரண மொழியில் சொல்வதெனில் என் பொதுவான
மொழியானது காற்றுதான். எனது காகிதங்கள்
அதுவே பாய்மரக்கலத்தின் ஓட்டமாகும்
ஆனால்
நான் இந்த வியாபாரம் (விவகாரம்) எவ்வாறு
துவங்குகிறது என்று சொல்லுகிறேன்.

○ இக்கவிதை The STAR - APPLB KINGDOM என்ற DEREK WALCOTTன் கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

1. Seraph–செராப்: மேலைய மரபின் தேவகணத்தில் ஒன்பதின் முதல்வர்.

2. மர்மோஸெட்: அமெரிக்கக் குரங்கு வகை. மயிரடர்ந்த வாலை உடையது.

---

(திரைப்படத்தில் தமிழ் அடையாளங்கள் 2 ஆம் பக்கம் தொடர்ச்சி)

'தேவர் மகன்' 'அஞ்சலி' போன்ற அண்மைக்கால திரைப் படங்களில் மேலை நாட்டுத் திரைப்படங்களில் பரவலாகக் காணப்படும் இருளும் ஒளியும் கலந்த வெளிச்ச நியாயம் கடைப்பிடிக்கப்பட்டு இருக்கிறது. மேலை நாடுகளில் சூரியன் அதிகம் பிரகாசிப்பது இல்லை. எனவே அங்கு இந்த வெளிச்சம் என்பது அந்த நாடுகளுக்கே உரிய நியாயமான வெளிச்சம். ஆனால் தமிழகம் போன்ற ஒரு வெப்பமண்டல பகுதியில் இதே வெளிச்சம் திரைப்படத்தின் பெரும்பகுதியில் இடம், பொருள், காலம் பற்றிய பிரக்ஞையற்று கடைபிடிக்கப் பட வேண்டுமா? இங்கு சூரியன் நிறைய பொழுது இருப்ப தினால் நமது வாழிடங்களின் உள்பகுதிகளும்கூட சூரிய வெளிச்சத்தால் நிரம்பி இருக்கின்றன. நமது வெளிச்சத்தைக் கூட நியாயமாக காட்டமுடியாத அளவுக்கு நம் திரைப்படங் கள் உள்ளன. வெளிச்சத்தில்கூட நமது வெளிச்சத்தைக் கடைப்பிடிக்காமல், மேலை நாட்டு வெளிச்சத்தை கடைப் பிடிப்பது எவ்வளவு பெரிய அவமானம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படி சிந்திக்கத் தொடங்கினோம் என்றால் தமிழ் திரைப்படங்கள் தமக்கென ஒரு அடையாளம் கொண்ட திரைப்படமாக உலக அரங்கில் உலாவர முடியும். இப்படி பேசுவது நம்மை நாமே கௌரவித்துக்கொள்ளும் தன்மான முயற்சியாகும். இதனை கிணற்றுத்தவளைத்தனம் என்று விமர்சிப்பவர்களைப் பற்றி கவலைப்படவேண்டியதில்லை.

●●

# புத்தகப் பக்கம்



நந்தனார் தெரு: விழி.பா. இதய வேந்தன், ( சிறுகதைகள் ) வெளியீடு: மக்கள் கலைஇலக் கிய பண்பாட்டு இயக்கம், 3, நாப்பாளையசந்து, விழுப்புரம் - 605602. பக்கம்: 102, விலை ரூ: 12.00.

இதய வேந்தனின் கதை களைப்பற்றி பாவண்ணன்முன் னுரையில் கூறுகிறார்: "இதய வேந்தன் சுட்டிக் காட்டும் எந்தப் பாத்திரமும் கற்பனை யாக இல்லை. தினம் தினம் நாம் காணும் மனிதனாகவே இருக்கிறார்கள்" என்கிறார். இது ஒன்றே ஒரு படைப்பா ளியை இனம் காண நல்ல ஒரு முன்னுரையாகும். கவிஞர் பழமலய், "விழுப்புரத்தில், அடிநிலை மக்களிடையில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருபவர், அவர்களிடமிருந்து அந்நியமாகி வெறும் போலி யாகிப்போகாமல், தங்கள் இருப்பை, மனசாட்சிக்குத் துரோகம் செய்யாமல், எண்ணி எண்ணிப் பார்க்கிறார். அவர் களோடு சேர்ந்து போராடு கிறார்" என்கிறார். இதுவே இவர் கதைகளிலும் காணக் கிடைக்கிறது. ஒரு வகையில் பார்த்தால் இவர் கதைகளின் அடிப்படையில் அவை "தலித் இலக்கியமாக" காட்சியளிக் கிறது.

□

19–ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ் கள்: அ.மா. சாமி, நவமணி பதிப்பகம்-12, 2 வது பெருஞ் சாலை, நகர வளர்ச்சி குடி யிருப்பு, சென்னை-4. பக்கம்: 304. டெம்மி . விலை ரு 75.00

ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பணியை தனியொரு மனிதராக நின்று அ.மா. சாமி செய்திருக்கிறார். இந்நூலுக்கு மேலும் மெரு கூட்டுவது 108 படங்கள் ஆகும். தமிழ் எதிரிகளிட மிருந்து இரு முனைகளிலும் ஆசிரியர் போராடி தனது கருத்தை நிறுவி இருக்கிறார். அது என்னவென்றால் "இந்தி யாவில் வெளிவந்த முதல் பத்திரிகை, 1812-இல் வெளி வந்த 'மாசத் தினச் சரிதை' தான். ஆனால் 1887-இல் வெளிவந்த லலிதப் பிரசோன தயாதான் தமிழில் முதல் நாளி தழ் என்றும், 1831-இல் வந்த 'தமிழ் மேகசின்'தான் முதல் தமிழ் இதழ் என்றும், 1900 இல் நாளிதழாக மாறிய "சுதேச மித்திரன்"தான் முதல் தமிழ் நாளிதழ் என்றும் தமிழ்நாட் டில் பார்ப்பனர்கள் டம்பமடிக் கின்றனர்.

இந்திய அளவில் வங்கத்து பார்ப்பனதாசர்கள், 1816-இல் வங்காளத்தில் 'வங்காள கெசட்டு' நடத்திய கங்காதரப் பட்டாச்சாரியாதான் இதழ் நடத்திய முதல் இந்தியர் என்று கடைந்தெடுத்த பொய்யை பரப்பி வருகின்ற இந்நேரத்தில் ஆசிரியரின் முழு உழைப்பும் நூல் நெடுக தெரிகிறது. தமிழ் இதழியல் வரலாற்றில் வெளி வராத பல செய்திகளை வெளிக் கொணர்ந்து இருக்கிறார். "சமரசமும் கிராமக் கல்வியும்" என்ற இதழ், பண்டமாற்று முறையில் விற்கப்பட்டிருக் கிறது. அது கூறுகிறது: "மன்னார்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் தபால் செல வின்றி நேரில் கொடுக்கப் படும். கிராமங்களில் பணத் திற்குபதிலாக பெறுமான தானி யம் வாங்கிக் கொள்ளப்படும்" என்று. இதுபோன்ற சுவாரசிய மான செய்திகள் பக்கத்திற்கு பக்கம் இருக்கின்றன. 1859-இல் 'தர்மபள்ளிபோதம்' என்ற மாத இதழின் விலை ஒரு பைசா மட்டுமே! நூலின் பின்புறம் உள்ள சொல்லடைவு இது போன்ற நூல்களுக்கு மிகுந்த பயனை அளிக்கின்றன. தமிழர் கள் அ.மா. சாமிக்கு என்ன கைமாறு செய்வது என்றால், உடனே இந்நூலை பள்ளி, கல்லூரி, நூலகங்கள் வாங்கி வைப்பதுதான். ஆசிரியர் கூறு வது போல தமிழ் இதழியல் வரலாறு இருட்டடிப்பு நடக் காமல் இருக்க உடன் இந்நூல் ஆங்கிலத்தில் வெளிவருவது தான் ஒரேவழி. தமிழுக்குப் பெருமை சேர்க்கும் இந்நூலை வெளியிட்ட அழூப் பாராட்டப் படவேண்டியவர்.

— ப. தி. அரசு

○ ○ ○

www.padippakam.com



REGD. No. TN / MS (C) 1109


# அரங்கேற்றம்

மேடை : 2 16-2-93 அறிமுகம் : 4

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு !


# சங்கராச்சாரியும் பெருஞ்சித்திரனாரும்



தமிழன் வரலாற்றில் ஒவ்வொரு நாளும் பின்னோக்கியே சென்று கொண்டிருக்கின்றான். தமிழனுடைய முன்னேற்றம் தன் பெண்டு, தன் பிள்ளை, தம் மக்கள் என்கின்ற அளவிலே முற்றிலுமாக சுருங்கி விட்டது. வெறும் சதைப் பிண்டமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

தன் இனத்தைப்பற்றிய சிந்தனையின்றி, அவன் மொழியும் நாடும் மாற்று மொழிக்காரர்களால் அழிக்கப்படுகின்றதை கைகட்டி, வாய் பொத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

இந்த அடிமைநிலை மாறவேண்டுமானால் முதலில் தமிழனுக்கு தன் மொழியின் மீது ஒரு வெறி வேண்டும். ஏனெனில் கேரளாவிலே சென்று தமிழிலே பேசி விபரம் தெரிந்துகொள்ள முடியாது, கர்நாடகத்திலே சென்று தமிழில் பேசி மீண்டு வரமுடியாது. ஆந்திராவில் சென்று தமிழில் பேசி வழி கேட்க முடியாது. எவ்வளவு படித்த மேதையானாலும் வட நாட்டிற்குச் சென்று தமிழிலே பேசி வழி தெரிந்துகொள்ள முடியாது.

ஆனால் தமிழ் நாட்டிற்கு வருகின்ற மலையாளி தமிழ் நாட்டை தன்னுடைய நாடாக மாற்றிக் கொண்டிருக்கின்றான். கன்னடக்காரன் அவன் நாடாக மாற்றிக் கொண்டிருக்கின்றான். ஆந்திரக்காரன் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றான். வட நாட்டான் தமிழ் நாட்டையே கபளீகரம் செய்ய முற்பட்டிருக்கின்றான். ஆனால் சொரணைகெட்ட தமிழன் இவனிடத்திலெல்லாம் தன் கட்சிக் கூட்டம் போட நிதி கேட்டு பல்லிளித்துக் கொண்டிருக்கின்றான்.

ஒரு பக்கத்திலே ஐயப்ப சாமியை வைத்து தமிழனை அடிமடையர்களாக்கிவிட்டார்கள். தமிழன் தலையிலேயே தங்களுக்கு அரிசியை சுமக்கச் செய்துவிட்டார்கள் மலையாளிகள். மறு பக்கத்திலே திருப்பதி வெங்கடேச பெருமாள். இன்னொரு பக்கத்திலே கருநாடக மாநில முகாம்பிகை. தமிழனுக்கு தன் நாட்டு கடவுள் மீது கூட நம்பிக்கை இல்லை.

இந்த அளவிற்கு நம்பிக்கை கெட்டுப் பாழாகிக்கொண்டிருக்கின்ற தமிழச் சாதியை துரிதமாகச் செயல்பட்டு தடுத்து நிறுத்தியாக வேண்டும். எயிட்ஸ் நோயை விட மிகக் கொடூரமான நோய் 'தன்னம்பிக்கை இன்மை'.

தந்தை பெரியாரின் அறுபதாண்டு இடையறாப் பணி தமிழனை சற்றே விழிப்படைய வைத்தது. ஆனால் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் சுய நலக் கூட்டமும் அவரின பெயரையும், படத்தையும் சிலையையும் பயன்படுத்தியே அவருடைய பணியை முற்றிலுமாக அழித்துவிட்டது.


ராஜீவ்காந்தியின் கொலைக்குப்பிறகு தமிழ் நாட்டில் தமிழ், தமிழன் என்று பேசுவதற்கே பெரும் துணிவு தேவைப்படுகின்றது. அரசியல் கட்சிகளோ கேட்கவே வேண்டாம். அவர்கள் சேமித்து வைத்திருக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதிலே மிகவும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றன. இப்படியெல்லாம் அச்சப்பட்டிருந்தால் தந்தை பெரியார் தன்னுடைய திரண்ட சொத்துக்களையெல்லாம் காப்பாற்றிக்கொண்டு மிகப் பெரிய கோடீசுவரராக வாழ்ந்து மடிந்திருப்பார். அவர் மட்டும் ஒரு சமுதாய சீர்திருத்தவாதியாக கடுமையான பணிகளை மேற்கொள்ளாமல் இருந்திருப்பாரானால் இன்றைய அரசியல்வாதிகள் பலரின் முகவரியே தமிழ் நாட்டிற்குத் தெரிந்திருக்காது.

சிறைக் கொடுமைகளுக்கும், சித்தரவதைகளுக்கும் அஞ்சியிருந்தால் செஞ்சீனத்தை மாசேதுங்கும், வடக்கு வியட்நாமை ஹோசிமின்னும், கியூபாவை பிடல் காஸ்ட்ரோவும் கொடுமையான ஆட்சியாளர்களிடமிருந்து மீட்டெடுத்திருக்க முடியாது. பல இலட்சக்கணக்கான யூத மக்களை மிகவும் கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி சாகடித்தான் இட்லர். பெயர் அறிய முடியாத பல லட்சக்கணக்கான யூதர்களின் தியாகத்தால் யூதநாடாம் இசுரேல் உருவானது. இன்றும் பாலஸ்தீன மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் செத்து மடிந்து கொண்டிருக்கின்றார்கள் பாலஸ்தீன நாட்டிற்காக. ஏன் பக்கத்திலே இருக்கின்ற ஈழத்திலே பல்லாயிரம் தமிழர்கள் செத்து மடிந்திருக்கின்றார்கள். விடுதலைக்கான விதை அங்கே தூவப்பட்டுவிட்டது. எந்தக் கொம்பனாலும் அந்த விடுதலையைத் தடுத்துவிட முடியாது.

தனி மனித வாழக்கையிலே கூட எத்தனையோ எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், அடுத்துக் கெடுத்தல், எதிர்பாராத சிக்கல்கள். அத்தனையையும் எதிர்கொண்டு வெற்றி பெற்றால்தான் வாழ்க்கை. அப்படி வெற்றி பெற்ற தனி மனிதர்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைதான் நாம் காணுகின்ற இன்றைய சமுதாயம்.

இந்து மதத்தின் பேரால் ஒரு சங்கராச்சாரியார் இங்கே பார்ப்பன ஆதிக்கத்தை நாளும் வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றார். ஆனால் தமிழன் விழிப்படைய தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் எழுதினால் அவர் தடாவில் சிறையில் தள்ளப்படுகின்றார்.

தமிழுக்காக நாளும் உழைக்கின்ற பெருஞ்சித்திரனாரை சிறைப் படுத்தியிருக்கின்ற கொடுமையைக் கண்டும், காணாமல் இருக்கின்ற தமிழர் தலைவர்களையும் மக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.



மிகக் கடுமையான அடக்குமுறைகளையும் ஏற்றுக் கொள்கின்ற மனோ வலிமையை புதிய தமிழன் பெற்றாக வேண்டும். இன்றோ, நாளையோ இந்த மாற்றம் செயற்பட்டு விடும் என்று கனவு காண்கின்ற, முட்டாள்கள் அல்ல நாம். ஏனெனில் நாம் புதிய தமிழனை புறநானூற்றுத் தமிழனாக விதைக்க இருக்கின்றோம். தமிழும், தமிழின உணர்வும் அவன் குடிக்கும் தாய்ப்பாலாக இருக்க வேண்டுமேயன்றி அரசியல் பதவி என்கின்ற அசிங்கமாக இருக்கக் கூடாது.

தமிழோசை பதிப்பகத்திற்காக, தமிழோசை அச்சகத்திலிருந்து அச்சிடுபவர்—வெளியிடுபவர்—ஆசிரியர் : ஆண்டாள்.
முகவரி : 84, அபிபுல்லா சாலை, தியாகராய நகர், சென்னை – 600 017.